GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY

உ
கடவுள்துணை.

செந்தமிழ்

தொகுதி-கஉ.] ஆனந்தஹு ஆனிமீ [பகுதி-அ.
Vol. XII. June—July. 1914. No. 8.

யசோதரகாவிய ஆராய்ச்சி.

———:(o):———

"செந்தமிழ்" (தொகுதி-கஉ பகுதி-எ-ல்) உருக-ம் பக்கத் தொடர்ச்சி.

நான்காவதுசருக்கம்.

இப்படி இருகோழிகளும், சண்டகருமனுற் கூடுகளுள்வைத்து நன்குவளர்க்கப்பெற்றுச் சுகமாகவாழுங்கால், இளவேனிற்காலம் வரவே, அதற்கறிகுறிகளாக எங்குப்பார்க்கினும் மரஞ் செடி கொடிகள் நன்குதளிர்த்து முகிழெடுத்து நிரம்பப்பூக்கவும், பூக்களினுள்ள தேனையருந்தி வண்டுகள் இசைபாடவும், கொந்துகளைக்குடைந்து குயில்கள்கூவவும், நறுமணங்கொண்டு தென்றல் திசைகள்தோறும் வீசவும், அவைகளைக்கண்டு எவரும் பெருமிதங்கொண்டனர். அப்பொழுது யசோமதியரசன், தன்மனைவியாம் புஷ்பாவளியுடன் நகரத்திற்குச் சிறிதுதூரத்திற்கப்பாற் பூஞ்செடிகளும் பூங்கொடிகளும் நிரம்பிய வொருசோலையின்கண், அசோகமரத்தடியிற் பூங்கொத்துக்களாலமைக்கப்பெற்ற வோராசனத்தில் அமர்ந்திருந்தனன். அவ்விடத்து உலகத்திலுள்ள அழகுகளெல்லாம் பெண்ணுருவெடுத்துவந்தாற்போன்ற வாரமாதர்களது ஆடல்பாடல்களைக் கண்டுங் கேட்டும், அரசன் தன்மனைவியுடன் களிப்புற்றிருந்தனன்.

அவ்வாறு அவ்விடத்து அரசன் மனமகிழ்ந்திருக்கையில் அவ்வனத்துள்ள தீயமனிதர்களேனும் தீயவிலங்குகளேனும் அரசனை நெருங்கித் தீங்கிழைக்காதபடி, சண்டகருமன் நாற்புறங்களிலுந் திரிந்து காவல்காத்துக்கொண்டிருந்தனன். அவன், காட்டினதொரு

*

புறத்து மரத்தினடியில் அகம்பனரென்னும் அருந்தவமுனிவரொருவர் யோகுகொண்டிருக்கக்கண்டு, அவரதுபக்கத்துச்சென்று கைகுவித்துத் தொழுதுநின்றனன். அம்முனிவர், ஸமாதியினின்றும் நீங்கிக் கண்திறந்துநோக்கவே, சண்டகருமன் அவரதுபொற்பாதங்களில் எட்டுறுப்பும்நிலந்தோயப்பணிந்து அவரைநோக்கி 'அடிகேள்! தாங்கள் இங்ஙனம் சலிப்பின்றித் தன்னந்தனியே நெடுநேரம் அசைவுறாது இருந்தவிடத்திலேயிருந்து கண்ணடைத்து மெய்மறந்து வேறொன்றினிடத்தும் மனநாட்டமின்றி எதனைநினைந்துகொண்டிருந்தீர்கள்? அவ்விதநினைப்பினாலாயபயன் யாது? எனக்கு மொழிந்தருளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டனன்.

முனிவர் அவனை அருள்கொண்டுநோக்கி, இவன் திருத்தமுற்று நல்வழிப்படுவான்போலுமெனநினைந்து, "கூரறிவினையுடையபெரியோர் பிறவிப்பிணிகளினின்று நீங்கக்கருதித் தம்மனத்திற்குறிப்பது, உறையினுளிட்டவாளேபோன்று உடம்பினுள் உடம்பினதளவாகி அதினின்றும்வேறாகவுள்ளதும், பேரறிவாதிய எண்குணங்களுள் ஒன்றுமே தாழ்வுபடாது நிறைவுற்றதுமாகிய ஜீவனையேயாகும். கடையிலறிவு இன்பம் வீரியம் காட்சியாதிய எண்குணங்களும்* நிறைந்து, நிர்மலநித்தமாகி, குரோதம் உலோபம் மானம் மாயமாகியவையெல்லா மொழிந்து எஞ்ஞான்றும் மூவுலகத்துச்சியில்நிற்றலே அப்பொருளின்தன்மையாம்" என்றனர்.

அதனைச்செவியேற்றசண்டகருமன், "இறைவனே! அரசரால் மரணதண்டனைவிதிக்கப்பெற்ற பெருந்திருடர்களை வெட்டி இருபிளவாகச்செய்வது எனதுதொழில். ஒருகால் ஒருகள்வனைப் பலதுண்டுகளாகத்துண்டித்தும், அவனதுதேகத்தில் ஜீவன் என்று தனியாயொருபொருளிருந்ததாக யான்கண்டதில்லை. தேவரீர் அருளியபடி சரீரத்தினின்றும் ஜீவன் வேறாகவிருப்பின், யான் அதனைக்கண்டிருத்தல்கூடுமன்றோ? இதுநிற்க; மற்றொருநாள் வேறொருகள்வனை வதைசெய்தற்குமுன்னும் வதைசெய்ததன்பின்னும் துலையிலிட்டு நிறைசெய்துபார்த்தேன். நிறையில் ஒருவிதபேதமுங்கண்டிலேன். ஜீவன்

---

* எண்குணங்களாவன:—அநந்தஞானம், அநந்தஸுகம், அநந்தவீரியம், அநந்ததரிசனம், அவ்யாபாதத்வம், அகுருலகுத்வம், அதிஸூக்ஷ்மத்வம், அவகஹநத்வம் என்பனவாம்.

கண்ணுக்குப்புலப்படாதாயினும், யான் இரண்டாவதுமுறை நிறை செய்தபொழுது நிறை குறைவாகவிருந்திருக்கவேண்டுமன்றோ? பின்னுமொருநாள் வேறொருகள்வனைக் குழியிலிட்டுமூடிச் சிறிதும் இடைவெளியின்றி அக்குழியை மண்ணையிட்டுத்தூர்த்துவிட்டு, சில நாட்சென்று குழியைத் திறந்துபார்க்கையிற் சரீரமட்டுமிருக்கக்கண் டேன். ஜீவனென ஒன்று தனியாகவிருந்திருப்பின், அதுபோன வழியொன்றுமே யான்கண்டிலேன். ஆகலின், உடம்பினுள் உடம்பி னின்று வேறாகவுள்ளது ஜீவனென எவ்வாறு யான் நம்பற்பாலது?" எனப் பணிவுடன்கேட்டனன்.

அதனைக்கேட்டு முனிவர் இவ்வாறுகூறுவாராயினர்—"ஐயனே! ஒருமரக்கட்டையைத் துண்டுதுண்டாகவெட்டிப் பலபின்னமாக்கிடி னும், அதனுளுள்ளநெருப்புக் கண்டறியப்படுவதில்லை. ஆயினும், அக்கட்டைகள் ஒன்றோடொன்று உரசுமாறு ஒன்றின்மேல் ஒன்றை ஊன்றிக் கடைவோமாயின், உடனே தீயெழும்பி அக்கட்டைகளையும் எரித்துவிடுகின்றது. அதுபோல்வாகும் சரீரத்தினுள்ளிருக்கும் ஜீவனதுதன்மையு மென் றறிவாயாக. பின்னும், ஒருதுருத்தியைத் துலையிலிட்டுநிறைகண்டு பின்னர் அதனுள் வாயுவேற்றி அதன்வாயை நன்றாக அடைத்துவிட்டு வாயுநிரம்பியதுருத்தியை மறுபடியும் அதேதுலையிலிட்டுநிறுக்கினும் நிறையில் ஒருபேதமுங்காணப்படுவ தில்லை.* அதுபோலவாகும், ஜீவன் சரீரத்தினுள் உள்ளபொழுதும், அதனைவிட்டு வெளியேறிப்போந்தபொழுதும் சரீரத்தின்நிறை மாறு படக்காணாமையும் என்று நீ அறிவாயாக. நிற்க, சந்து பொந்து ஒன்றுமில்லாத வொரு நிலமாளிகைக்குள்ளிருந்து ஒருவன் பலமாகச் சங்கத்தொனிசெய்வானாயின், அந்தத்தொனி வெளியேவந்து காதிற் குக்கேட்கின்றது. அந்தச்சங்கத்தொனி வெளியேறியவழியோ நமது கண்ணுக்குப்புலப்படுவதில்லை. அதுபோலவாகும் சரீரத்தினின்று ஜீவன்வெளியேறிப்போந்தவழியு மென் றறியக்கடவை. இவ்வகை யாகும் ஜீவன், வகைதொகையில்லாத வல்வினைக்காற்றுக்களால், தீக்

---

*இவ்வுபமானம் பொருத்தமுடைத்தன்று. வாயுவுக்குக்கனமுண்டென்னும் உண்மை இவருக்குத்தெரியாதுபோலும். இங்கு, ஒருபொற்கட்டியைத் துலையி லிட்டு நிறைகண்டு பின்னர் உலையிலிட்டுப் பழுக்கக்காய்ச்சித் தீயுடன்கூடிய வதனை மறுபடியும் அதேதுலையிலிட்டுநிறுக்கினும் நிறையில் அதிகப்படுவதில்லை யெனக் காட்டியிருப்பிற் பொருத்தமுடையதாம்.

கதிகள்நான்கினுள், சுழன்றுழல்கின்றனன். இவ்வுண்மையை, நல்லறிவு1 நற்காட்சி2 நல்லொழுக்க3மெனப்படும் அருங்கலமும்மை4 யணிந்தார் நன்கறிவர்" என்றலும், சண்டகருமன் "ஸ்வாமிகாள்! ஒரேபொருளினிடத்துமட்டும் மனத்தினையூன்றிநிறுத்தி அதனை வேறெதனிடத்தும்படாவிடாது ஒருமுகப்படுத்துகை ஏகசித்தத்தவ ராகிய தம்மையொத்தபெரியோருக்கு எளிதேயாகும். பொறிகள் பாயும்வழிகளிலெல்லாம் பாய்ந்துசெல்லும் மனத்தினையுடைய போக சித்தத்தவராகிய ஏனையோருக்கு உறுதிக்கேதுவாயதெதுவென யான் தெளியுமாறு எனக் கருளிச்செய்யவேண்டும்" என்று கனிந்துகேட்க வே, முனிவர் பின்னும் அவனைநோக்கி "ஐயனே! நல்லறிவு நற்காட்சி நல்லொழுக்கமாகிய மூன்றினையும்பெற்று நன்னம்பிக்கைகொண்டு பெருங்குணத்தோடொழுகுவாருக்கு, இம்மையிற் பெருமையும் மறு மையில், தேவர்களுக்கான இன்பமும் வந்து கூடுவதுமன்றி, மேலே கூறிய வீடென்னும் நிலைத்தவின்பமாகிய பெரும்பேறும் முறையின் வந்துறும். பொருள்களை*யெல்லாம் பொய்யின்றி உள்ளவாறு உணர்தல் நல்லறிவு எனப்படும். அவ்வாறுணர்ந்த அனைத்தினையும் மெய்யெனத்தெளிந்து தேறி, அருகக்கடவுளாலருளப்பெற்ற குற்ற மில்லா நல்லறப்பெருமையின்கண் நன்னம்பிக்கையுடையனாதல் நற்காட்சி எனப்படும். அவ்வழியினையேகடைப்பிடித்து, அல்லவை கடிந்து நல்லவைபுரிந்தொழுகல் நல்லொழுக்கம் எனப்படும். இயங் குயிர்களைக்கொல்லாமை, பிறர்கெடப் பொய்யாமை, கள்ளாமை,

1. 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌂. 2. 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌂. 3. 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑌂.
4. 𑌰𑌤𑍍𑌨𑌤𑍍𑌰𑌯𑌂.

* ஜைநமதத்தில், ஜீவன் அஜீவன் ஆஸ்ரவம் ஸம்வரம் நிர்ஜரம் பந்தம் மோக்ஷம் எனத் தத்துவங்கள் ஏழு. சிலர் புண்ணியம் பாபம் என்றிரண்டையும் சேர்த்து, ஒன்பதுபதார்த்தங்களென்பர். ஏழாகச்சொல்லுங்காற் புண்ணியபாபங் கள் பந்தத்தினுட்சேரும். ஜீவன்-உயிர்; அஜீவன்-உயிரல்லது; ஆஸ்ரவம்-ஊற்று; ஸம்வரம்-செறிப்பு; நிர்ஜரம்-உதிர்ப்பு; பந்தம்-கட்டு; மோக்ஷம்-வீடு.

"உயிருமுயிரல்லதும்புண்ணியம்பாவமூற்றும்
செயிர்தீர்செறிப்புமுதிர்ப்புங்கட்டும்வீடுமுற்றத்
துயர்தீர்க்குந்தூயநெறியுஞ்சுருக்காயுரைப்பன்
மயறீர்ந்தகாட்சியுடையோயிதுகேண்மதித்தே." மேருமந்தரபுராணம். 68.

விதித்தவழியின்றிக் காமநுகராமை, இன்பநுகர்தற்கானபொருள் களினிடத்து ஆசைப்பெருக்குக்கிரையாகாமை ஆகிய ஐந்து அணு விரதங்களைக் கைக்கொள்ளலும், உணர்வைக்கெடுக்குங் கள், புழுப் பயின்ற தேன், பிறவற்றின்புண்ணாகிய தசை இவைகளை உண்ணாது விடுத்தலும், இல்லறத்தாருக்குற்ற நல்லொழுக்கங்களாம். கொல்லா மை, பகைநிறைந்த இவ்வுலகத்தில் எங்கும் பிணக்கின்றி இணக்க முற்ற பெருவாழ்வைத்தரும். விபரீதவேறுபாடுகளுக்கிடமின்றி உண் மைபேசுதல், வாய்மொழியில் மேலான மதிப்பையுண்டுபண்ணும். கள்ளாமை, நேர்மைகாரணமாக விலையேறப்பெற்ற செல்வப்பொழி வைத் தானேகொணர்ந்துசேர்த்து அதனைப் பெருகச்செய்யும். காமநுகராமை, மேலுக்குமேல் தேகவலுவையும் மனவுறுதியையும் சொல்வன்மையையும் தரும். பொருள்களினிடத்து அவாவின்மை, கலக்கமற்றமனத்தின்கண், தெளிந்த அறிவினைத்தந்து பழம்பிறப் புணர்ச்சியை நல்கும். ஊன் தேன் கள் ஆகிய இம்மூன்றினையும் விலக்கல், ஒளி அழகு வெற்றி நல்லகுடிவாழ்க்கை இன்பம் ஆகிய பலவகைநன்மைகளைப் பயக்கும். சண்டகருமனே! இதுகாறும் நீ மனமுவந்து செவிகொடுத்துக்கேட்ட இவ்வொழுக்கங்களைக்கைப் பற்றித் தூயவழியிற்சென்று உயர்வுற்றுவாழ்வையாக" என்றனர்.

சண்டகருமன், "அருந்தவர்க்கரசே! கொலைபுரியாதொழிய நினைத்தல் என் மட்டிற் போகாதவூருக்கு வழிதேடுதலேயாகும். கொலைசெய்யாதொழியின் என்பிழைப்பு அழியும். அஃதொன்று மட்டும் நீங்கலாக மற்றெதனையும் யான் ஏற்றனன்" என்றனன். அகம் பனமுனிவர் பின்னும் சண்டகருமனைநோக்கிக் கூறுவாராயினர்:— "எவ்வுயிரும் தம்முயிரேபோல்வதாமெனவுணர்ந்து, பிறவுயிர்கள் வருத்தமுறக்காணின், அவ்வருத்தம் தமக்கேநேர்ந்ததுபோல் இத யக்கனிவினோடு அருள்பொழியுங்கண்கள்கொண்டுநோக்கி, அவ்வுயிர் கள் வருத்தம்நீங்கி உய்யுமாறு இயன்றவரையில் உதவிபுரிதலே மற் றெல்லாவற்றுள்ளும் மேலானவிரதமாகும். இவ்வகையாகிய ஜீவகா ருணியமே கொல்லாமையாகியவிரதத்திற்கு மூலாதாரமாம். வாய்மை

முதலாம் மற்றையவிரதங்கள்யாவும் இக்கொல்லாவிரதத்திற்கே பக்கத் துணைகளாம்.* இன்றளவும் சிறிதும் மனவிரக்கமின்றிப் பல்லுயிர்களைக்கொன்றும், பின்னும் பல்லுயிர்களைக்கொன்று அவற்றின் தசைகளைத்தின்றும், நீ உனது பிறவிக்கடல்களைப்பெருக்கிக்கொண்டனை. பிறந்துபிறந்து அப்பிறவிகள்தோறும் நீ பெருக்கிக்கொண்ட பாவங்களெல்லாம் சிறந்த நல்லறத்தினாலன்றித் தீருமாறு முளதோ? இவ்வுலகில் நாள்தோறும் இடையறாது எண்ணிறந்தஜனங்கள் இறக்கக்கண்டும், தாம்மட்டும் எண்ணிலாக்காலம் சாவாவரம் பெற்றுவந்தவரேபோல எண்ணி, உயிர்க்கொலைக்குச் சிறிதுமஞ்சாது பலவுயிர்களையும் கூசாதுகொன்றொழித்த கொடுங்கோன்மன்னர்களுள், சில

---

* "ஒன்றாகநல்லதுகொல்லாமைமற்றதன், பின்சாரப்பொய்யாமைநன்று." (குறள் 323) என்றருளினார் திருவள்ளுவரும்.

'ஹிம்ஸாந்ருதஸ்தேயாப்ரஹ்மபரிக்ரஹேப்யோ விரதிர்வ்ரதம்.' (தத்வார்த்தசாஸ்திரம். 7 அத். 1. சூத்திரம்) இதன் வியாக்கியானத்தில் "அஹிம்ஸாவ்ரதமாதௌ க்ரியதே। ப்ரதாநத்வாத்। ஸத்யாதீநி தஸ்ய பரிபாலநார்த்தாநி। ஸஸ்யஸ்ய வ்ருதிபரிக்ஷேபவத்॥" என்று காணப்படுகின்றது.

(இ - ள்.) கொல்லாவதம் தலைமையானதுபற்றி முதலிற்கூறப்பட்டது. மரம்முதலியவற்றின் பலன்களைக்காக்க வேலிகட்டுவதுபோல், கொல்லாவதத்தைக்காக்கவே மற்றையவிரதங்கள்யாவும் ஏற்பட்டனவாம். (என்பதாம்.)

"அஹிம்ஸாஸத்யாஸ்தேயப்ரஹ்மசர்யாபரிக்ரஹா யமா:" (பாதஞ்சலயோகநூல் 2 அத். 31 சூத்திரம்) "தத்ராஹிம்ஸா ஸர்வதா ஸர்வதா ஸர்வபூதாநாமநபித்ரோஹ:। உத்தரே ச யமநியமாஸ்தந்மூலாஸ்தத்ஸித்திபரதயா தத்ப்ரதிபாதநாய ப்ரதிபாத்யந்தே"॥

(இ - ள்.) அஹிம்ஸா (கொல்லாமை) ஸத்யம் (வாய்மை) அஸ்தேயம் (கள்ளாமை) ப்ரஹ்மசர்யம் (காமநுகராமை) அபரிக்ரஹம் (அவாவின்மை) இவை யமம் எனப்படும். கொல்லாமையென்பது ஒருவிதத்திலும் ஓரிடத்தும் ஒருபிராணிக்கும் ஒருவிதத்தீங்கும் இழைக்காதிருத்தல். மற்ற யம நியமங்கள்யாவும் இக்கொல்லாமையையே பிரயோஜனமாகக்கொண்டவை. கொல்லாமையென்றவிரதம் நிலைத்திருப்பதற்காகவே அவைகள்யாவும் கூறப்பட்டுள்ளன என்பதாம்.

ரேனும் இன்றளவும் சாகாதுகின்றாரில்லை. அவர்கள் தீராத்துயர் களுக்கிரையாகிப் பிறவிக்கடல்களுள் ஆழ்ந்தழுந்தினார். மேலும் இதனைச் செவிகொடுத்துக்கேட்பாயாக. யசோதரமன்னனும் அவ னன்னையாகிய சந்திரமதியும் மாவினாற்செய்தகோழியைக் கொலை புரிந்தகொடுமையாற் பிறவிக்கடல்களுட் சுற்றிச்சுழன்று சொலற் கரிய கடுந்துயர்களெய்தி, இறுதியிற் கோழிகளாகப்பிறந்து இப்பொ ழுது நின்னயல் அக்கூடுகளி லடைபட்டுநிற்கின்றனர். உயிர்க்கொலை நினைப்பினான்மட்டுமே அவ்விருவரும் இவ்வகைப்பட்ட கடியதுன் பங்களுக் குள்ளாயினாராயின், உயிர்களினிடத்து அருள்கெட்டு மன தார உயிர்க்கொலைகள்புரிவாருக்கு, தொலையாத்தொல்லைகளைத்தரும் அருநரகுகளல்லாது சேருமிடங்கள் வேறெதுவுமில்லை" என்று கூறி னர். இங்ஙனம் மாசு மறுவற்ற முனிவர்கூறிய நல்லறவிதிகளை உள் ளாழ்ந்தறிந்துகேட்ட சண்டகருமன், மனங்கலங்கி வாடி முற்கூறிய வொழுக்கங்களனைத்தினையுங் கைக்கொண்டு முனிவரைப்பணிந்து "தாபதசிரேஷ்டரே! மதிமயக்குற்று உயிர்க்கொலைகளுக்கஞ்சாதிருந்த பாவியேன் நும்மாற் பெரும்பயனுற்றேன்." என மனமுவந்துமொ ழிந்து விடைபெற்றுப்போந்தனன்.

அறிவிலாமையாகிய இருள்மூடித் தம் முற்பிறப்புக்களையுணராது சண்டையிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்த இரண்டுகோழிகளும் முனிவரூட்டிய அறவமுதையுண்டு தம் பழம்பிறப்புக்களையுணர்ந்தது மன்றி, கொலைப்பாவத்தால்நேர்ந்த பிறவிப்பிணிகளெல்லாம் இப்பிறப் புடன் விலகிவிடுவதாகவறிந்து, தீயநினைவுகளையெல்லாம் மனத்தினின் றோட்டி மாவதத்தின்கண்(1)பொருந்திய மனத்தினவாகிக் களிப்

(1) "கொலைமுதலாவைந்தனையுமுற்றத்துறத்தல் - தலையாயமாவதமாம்." என்றார் அருங்கலச்செப்பினும். (அருங்கலச்செப்பு 87.) மஹாவிரதம் (மஹாவ்ரதம்) மாவதம்.

"ஜாதிதேசகாலஸமயாநவச்சிந்நா: ஸார்வபௌமா மஹாவ்ரதம்।" (பாதஞ்சலயோகம் 2 அத். 32 சூத்திரம்) இ-ள். எவ்வுயிருக்கும், எவ்விடத்தும் எக்காலத்தும் யாதுநிமித்தமும் கொலை களவு காமம் பொய் அவா இவைகளாலாகியதீமைகளை மனதிலும் நினையாதிருத்தல் மஹாவிரதமெனப் படும் என்பதாம்.

படைந்துகூவின. அச்சத்தம், சோலையின்கண் அரசியுடன் நித்திரை கொண்டிருந்த அரசனது செவிக்கெட்டவே, ஆங்கிருந்த பெண்பாலார்பலரும் தன்வல்லமையைக்காணுமாறு அவன், (1) சொல்லறிகணையொன்றைத் தொடுத்துவிடுத்து இரண்டுகோழிகளையும் வெட்டி வீழ்த்தினன். அரசன் வேனிற்காலம்நீங்கித் தன்பரிவாரங்களுடன் நகரமெய்தினன். இறந்துவிட்டகோழிகளிரண்டும், விலங்குக்கதிநீங்கி அரசனதுதேவியாகிய புஷ்பாவளியின்கருப்பத்தைச்சார்ந்து மனிதப் பிறப்புற்று அரசிளங்குழந்தைகளாகப்பிறந்தன. அவ்விரட்டைக் குழந்தைகளுள் முன்னவன்பெயர் அபயருசி. பின்னவள்பெயர் அபயமதி. பின்னர்ச் சிலவாண்டுகள்சென்று புஷ்பாவளி யசோதரன் என்னும் ஒ ராண்மகவையும் ஈன்றனள். அரசிளங்குமாரனாகிய அபய ருசி, மன்னர்களுக்குரிய யானையேற்றம் குதிரையேற்றம் தேரேற்றம் வில்வித்தை வாள்வித்தை நீதிநூல்கள் தருமநூல்கள்முதலிய கலைகளி லெல்லாம்பயின்று தேர்ச்சியடைந்தனன்.

(தொடரும்.)

T. S. குப்புஸ்வாமிசாஸ்திரி.

---

(1) சொல்லறிகணை-சப்தவேதியென்னும்பாணம்; அது சத்தங் கிளம்பிய விடம்நோக்கிச்சென்றுதாக்குவது.

செல்வ நூல்.

ECONOMY.

“செந்தமிழ்” (தொகுதி கஉ பகுதி எ-ல்) உகூச-ம் பக்கத் தொடர்ச்சி.

அத்யாயம் 17.

சீட்டுக்காசுகள்.
(Paper Currency)

பணம்.
(Money)

காசு. (Coins)	சீட்டுக்காசுகள். (Paper currency)

92. காசு என்பதைப்பற்றியும், அது நாகரீகத்தின்விருத்தியைக் குறிப்பதுதவிர நாகரீகமானதேசங்களில் வியாபாரமுதலானபரிவர்த்தனைகளுக்கு, இன்றியமையாததென்பதைப்பற்றியும் முன் விவரித்திருக்கின்றோம்.

93. காசு (Coin) என்பது பணம் (Money) என்பதன் ஒரு பகுதியாம். பண்டமாற்றலுக்குச்சாதனமானதே பணம். அது, முற்காலத்தில் ஆடுமாடுகள், தானியாதிகளாக இருந்தது. பிறகு எடுத்துச்செல்லச்சௌகரியமான காசுகள் பணமாகவழங்க ஆரம்பித்தன. அதிலும், ஆதியிற் செம்பு, பித்தளைமுதலிய தாழ்ந்தலோகங்களே காசாய்வழங்கின. வரவர நாகரீகத்துக்கும் தேசச்செல்வப் பெருக்குக்குந்தக்கவாறு, வெள்ளியும், பொன்னும் நாணயங்களாக அடிக்கப்பட்டு, வழங்கஆரம்பித்தன. 24) அணுத்துட்டைக் கொண்டு போவதைப்பார்க்கிலும், 15 ரூபாயைக் கொண்டுசெல்லல் எளிது. 15 ரூபாயைத் தூக்கிச்செல்லுவதைப்பார்க்கிலும். ஒருபவுனைத் தூக்கிச் செல்லல் அதிலும் எளிதல்லவா? அதேமாதிரி 100 பவுன் அல்லது 1500ரூபாயைக் கொண்டுசெல்லலைப்பார்க்கிலும், அதிலும் எளிதான

வேறுசாதனமிருப்பது சௌகரியமல்லவா? கேவலம் ரூபாய் அணா பைசாவிலும், சொற்பத்தொகையிலும் பழகுவோருக்கு, காசுகளே போதும். அப்படியல்லாது ஆயிரம், லக்ஷமென்றுபழகும் ஸர்க்கார், தனிகர், வியாபாரிகளுக்கு நாணயப்பழக்கம்மாத்திரம் போதாதல்லவா? அவ்வித அசௌகரியங்களை நீக்கும்பொருட்டுத்தான் நாணயச்சீட்டுக்கள் என்னும் கடிதப்பணங் (paper currency)களை ஸர்க்கார் ஆதரவின்பேரிலும், அனுமதியின்பேரிலும், சட்டப்படி வழங்கிவருகிறார்கள்.

94. சீட்டுக்காசுகள். (Currency notes) இவைகளில், ஸர்க்காரால் தங்கள்பொறுப்பின்பேரிலும், கேட்டபோதுகொடுப்பதான ஒப்பந்தத்தி (Promise to pay on demand) ன்பேரிலும் வழக்கில் உபயோகப்படுத்தப்படுவனயாவும் காசுநோட்டுக்கள் (Currency notes) என்று பெயர்பெறும். காசுநோட்டுக்களாவன: நாணயங்களுக்குப்பதிலா யுபயோகப்படும் சீட்டுக்கள் அல்லது சாஸனங்களாம். பவுன், ரூபாய், அணா, துட்டுமுதலான நாணயங்களைத் தாராளமாய் வழங்குவதுபோலவே, இவைகளையும் ஜனங்கள் பரஸ்பரம் மாற்றிக்கொள்ளலாம். இவைகளைக்கொண்டு கடன்செலுத்தலாம். கிஸ்தி செலுத்தலாம். எந்தச்சமயத்திலும் ஸர்க்கார்க்கஜானாவிற்கொடுத்து நாணயமாய்மாற்றிவிடலாம்.

95. ஸர்க்கார்முறை. இந்தநோட்டுக்களை ப்ரசுரிக்கும்விஷயத்தில், இராஜாங்கத்தாரிஷ்டப்படி வேண்டியவளவு, 'காகிதச்செலவுதானே' என்று அச்சடித்துப் பிரசுரிப்பதென்றல்ல. கோடிரூபாய்க்குக் காகிதநோட்டுக்கள்அடித்தால் அவ்வளவுதொகை எப்பொழுதும் ஸர்க்கார்க்கஜானாவில் தயாராயிருக்கும். நோட்டுக்குப் பணம் எந்த க்ஷணத்திற்கேட்டாலும் கஜானாவிற் கொடுக்கத் தயாராயிருக்கவேண்டும். அப்படியல்லாது, அளவுக்குமிஞ்சி நோட்டுக்கள்அடித்து வெளிப்படுத்திவிட்டு, நோட்டுக்குப்பணம் கஜானாவிற்கிடைப்பதரிது, பணமுடக்கம் என்னும் வதந்தி தேசத்திற்பாவவிட்டால், வெளியில் நடமாடும் நோட்டுக்கள் சரியானபடிசெலாவணியாகமாட்டா. இருந்தவிடத்திலேயே கட்டிக்கிடக்கும் (locked up). அவைகளைக்கொண்டு பண்டமாற்றமுடியாது. வியாபாரம் முறிந்துவிடும். வியாபாரிகள்

நொடித்துப்போவார்கள். சௌகர்யத்தின்பொருட்டு நோட்டுக் களையே வாங்கிவைத்திருக்கும் பாங்குகளும், அநேகதனிகர்களும் திவாலாய்விடுவார்கள். புத்திக்கூர்மையுள்ளவர்கள், மெள்ள நாண யங்களை வெளியேவிடாமற் சுருக்கிவிடுவார்கள். அயல்தேசத்தி லிருந்து இறக்குமதியாகும் சாமான்களுக்குப்பதிலாய் இத்தேசத்துப் பொன்முதலான உயர்ந்தநாணயங்கள் வெளியேசென்றுவிடும். நாள டைவில், தேசமே தரித்திரதசையடைந்துவிடும். ஆகையால் அள வுக்குமிஞ்சி நோட்டுக்களையடித்து வெளிவிடுவது தப்புமுறையாகும்.

அத்யாயம் 18.

செலாவணிச்சீட்டுக்கள்.

(Negotiable Instruments)

96. முன், ஸர்க்காரால், ஸர்க்காரின்ஜவாபுதாரியின்பேரில் சௌகரியத்துக்காக வெளிப்படுத்தப்படும் நோட்டுக்களைப்பற்றிச் சொல்லப்பட்டது.

97. ஸர்க்கார் அனுமதியின்பேரிலும், சட்ட ஆதாரத்தைக் கொண்டும், ஜனங்களே பரஸ்பரம் சிலசௌகர்யங்கள்செய்துகொள்ள லாம். அவைகள், செலாவணிச்சீட்டுக்கள் எனப்படும். அவைகள் சிலவிதிகளுக் குட்பட்டிருக்கின்றன. அவைகளுக்குப்பொறுப்பு அவைகளைக்கொடுத்தவனே (Maker) தவிர ஸர்க்காரல்ல.

98. செலாவணிச்சீட்டுக்கள்* மூன்றுவகைப்படும்:—

(1) ப்ராமிஸரிநோட்டு. (Promissory Note).

(2) ஹூண்டி அல்லது உண்டியல். (Bill of Exchange)

(3) செக். (Cheque)

I. ப்ராமிஸரிநோட்டு.

99. ப்ராமிஸரிநோட்டு எழுதவேண்டியவிதம்.

இராமனுக்குச் சேஷன் எழுதிக்கொடுத்த புரோநோட்டு. நாளிது தெய்தியில், தம்மிடமிருந்து ரொக்கம்பெற்றுக்கொண்டது ரூ 100.

---

* இவைகளைப்பற்றி 1881-ம் ௵ 26-வது ஆக்ட் (Negotiable Instruments Act)டில் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்த ரூபாய் நூறையும் மாதம் ஒன்றுக்கு 100-க்குரூ 1 வீதம் வட்டியுடன், வேண்டும்போது தமக்காவது தம் உத்தரவுக்காவது செலுத்துவேனாகவும்.

ஒருஅணாத் தலை சேஷன்.

20—8—1914.

100. விசேஷக்குறிப்புக்கள் :—இதுதான் ப்ராமிஸரிநோட்டு எழுதவேண்டியவிதம். இதில் இராமன், சேஷன் என்பவர்களின் சரியானவிலாஸங்களை எழுதிக்கொள்ளலாம். ரொக்கம் என்னுமிடத்தில் முன் கடனாகவாங்கிக்கொண்டது என்றாவது வேறு சரக்குகளின் விலை என்றாவது ப்ரதிப்ரயோசனத்தின் (consideration) விவரத்தைக் காட்டிக்கொள்ளலாம். இதில் சேஷன் என்பவன், ப்ராமிஸரிநோட்டு எழுதிக்கொடுத்தவன் (Maker of the promissory note) ஆதலால் கொடுத்தவன் என்றும், பணம் செலுத்தவேண்டியவன் என்றுங் கூறப்படுவன். இராமன் என்பவன் நோட்டெழுதிவாங்கினவனாதலால், கொண்டவன் என்றும், பணம்பெற்றுக்கொள்ளவேண்டியவ னாதால், செல்லவேண்டியவன் என்றுங் கூறப்படுவன். வாயிதாக்குறிக்காதவிஷயத்தில், கொண்டவன்வேண்டும்போது கொடுக்கவேண்டியது தான். வேண்டும்போது என்னுமிடத்தில் தவணையும் குறிப்பிடலாம். ப்ராமிஸரிநோட்டுக்களில் உத்தரவுக்காவது என்னும் பதம் முக்யமானது. அது இல்லாவிட்டால் அதை இன்னொருவருக்குச் செலாவணி (Negotiate) அல்லது மேடோவர் செய்யமுடியாது. ப்ராமிஸரிநோட்டுப்படி செல்லவேண்டியதொகை, குறிப்பிட்ட பணமாகவும், நாடோடியாய்வழங்கும் ரூபாய், அணா, பைசாவாற்குறிப்பிட்டதாகவு மிருக்க வேண்டும். அப்படியன்றி 'இந்தநிலத்திற் பாதிமகசூல் கொடுப்பேன்' 'அந்தச்சாமானின்கிரயத்தைக் கொடுப்பேன்' என்பவைபோன்ற ஒப்பந்தங்களில், நோட்டெழுதப்பட்டகாலத்தில் தொகைநிர்ணயமாகாததால், அவை ப்ராமிஸரிநோட்டாகமாட்டா. வட்டிபோடவேண்டுமென்பது கட்டாயமல்ல. எழுதிக்கொடுத்த இடத்தை நோட்டிற்குறிப்பது சட்டப்படி அவசியமில்லாவிடினும், வியாஜ்யம் நேர்ந்தால், அதைத்

தாக்கல்செய்யவேண்டிய கோர்ட்டையறிவதற்கு அது அவசியமாயிருப்பதால் இடத்தையும் குறித்தல்வேண்டும். தெய்தி எழுதியிருந்தால்தான் வியாஜ்யமூலம் உண்டானகாலமும், காலாவதியும் நிர்ணயிக்கச் சௌகரியமுண்டு. ப்ராமிஸரிநோட்டில் பணஞ் செலுத்துவதாய்ச்செய்யும் ஒப்பந்தமானது யாதொருவிதமான நிபந்தனை (condition)க்கும் உட்பட்டிருக்கலாகாது. இன்னநேர்ந்தாற்கொடுப்பேன் என்பது ப்ராமிஸரிநோட்டின் ஷரத்தாகமாட்டாது. நோட்டின் இறுதியில், எழுத்துமூலமாய்க் கொண்டவன் கொடுத்தவனுக்குச் செய்யும் அறிக்கையே பராதீனம் (Endorsement) அல்லது மேடோவராகும்.

அது, கோபாலனிடமாவது ஷை உத்தரவுக்காவது செலுத்து.

(கையொப்பம்) இராமன். 21—8—1914. என்பதாம்.

உத்தரவுக்காவது என்னும் ஷரத்திருக்குமானால் நோட்டு எத்தனைபேருக்குவேண்டுமானாலும் மாற்றப்படலாம்.

ii. ஹூண்டி.
(Bill of Exchange)

101. ஹூண்டி அல்லது உண்டியல் விவரம்.

"கும்பகோணம் இராமையருக்கு,

சேஷையருக்காவது ஷை உத்தரவுக்காவது வேண்டும்போது / ஒருமாதத்தவணையில்

ரூ 100 (நூறு) கொடுக்கவும்.

மதுரை
1—10—1914 } கிருஷ்ணையர்"

102. ஹூண்டியும் ப்ராமிஸரிநோட்டும்:—ப்ராமிஸரிநோட்டில் எழுதிக்கொடுத்தவன், எழுதிவாங்கியவன் என்று இருவர்தாமிருக்கின்றனர். அதில், எழுதிக்கொடுத்தவன்தான் பணம்செலுத்தவேண்டியவன். ஹூண்டியிலோ கொடுத்தவன், கொண்டவன் என்ற இருவரும்போகச் செலுத்துவோனொருவன் மூன்றாவதுமனுஷ்யனாக

ஏற்பட்டுவிடுகிறான். அநேகமாய் ப்ராமிஸரிநோட்டைப்பற்றிய விதிகளே இதற்கும் உபயோகப்படுகின்றன. பணம் செல்லாகும்வரை கொடுத்தவனும் ஜவாபுதாரிதான். கொண்டவன் ஷை ஹூண்டியைச் செலுத்துவோனிடங்கொண்டுசென்றால் அவனுக்கிஷ்டமானால் 'சம்மதம்' (accepted) என்று, ஹூண்டியில் குறுக்காக எழுதிக் கொடுப்பான். உடனே அவனும் அதற்கு ஜவாபுதாரியாய்விடுகிறான்.

103. செல்லாமை:—(Dishonour) மேற்கூறியவாறு சம்மதிக்காவிட்டாற் சம்மதமில்லையென்று சொல்லிவிடலாம். அப்பொழுது செலுத்துவோன(Drawee)க்கு யாதொருபொறுப்புமில்லை. அதனால் உண்டான நஷ்டத்துக்குக் கொடுத்தவனே (Drawer or Maker) ஜவாபுதாரி.

104. ஆனால், கொண்டவன், ஹூண்டியைக் கூடியசீக்கிரம் செலுத்துவோனிடம் ஆஜர்ப்படுத்தவேண்டும். அவனுக்குச் சம்மதமில்லையாகில், ஷை விஷயத்தைக் கொடுத்தவனுக்கு உடனே தெரிவிக்கவேண்டும்.

iii. செக்.

105. செக் என்பது ஹூண்டியைப்போன்ற இன்னொருவகைச் சாஸனம்.

விதம்.

"சென்னை இந்தியன்பாங்கிக்கு,

இராமனுக்காவது ஷை உத்தரவுக்காவது ரூ 100 (நூறு) கொடுக்கவும்

மதுரை 1—10—1914 } சேஷன்."

106. ஹூண்டியும் செக்கும்:—

(1) செக், பாங்கில் பணம்வாங்குவதற்குத்தான் உபயோகம்.

(2) இதைக்காட்டினவுடனே பணம் கொடுக்கவேண்டும்.

(3) இதற்குச் சம்மதமில்லையென்றுசொல்லக்கூடாது.

(4) பாங்கு அல்லது நிதியில் பணம்போட்டிருப்பவன்தான் செக் எழுதிக்கொடுக்கலாம்.

அத்யாயம் 19.

அன்னியதேசவர்த்தகம்.
(Foreign Commerce)

107. வர்த்தகம் உள்நாட்டுவர்த்தகம் என்றும், வெளிநாட்டு வர்த்தகம் என்றும் இருவகைப்படும். உள்நாட்டுவர்த்தகம் என்பது, ஹிமயமலைமுதற் கன்யாகுமரிவரையும், பர்மாமுதல் ஸிந்துதேசம் முழுமையு முள்ளதும், ஒரே அரசாட்சிக்குட்பட்டதுமான இத் தேசத்தின் எல்லைக்குள்ளேயே செய்யப்படும் வர்த்தகமாகும்.

108. வெளிநாட்டுவர்த்தகம்:—அப்படியல்லாது, இந்தியா தேசமானது இதரதேசங்களுடன் செய்யும்வர்த்தகம் வெளிநாட்டு வர்த்தகமாகும்.

109. வெளிநாட்டுவர்த்தகத்திலுள்ளசாதகங்கள் : — இடம், பொருள், ஏவல் என்பவை செல்வவிருத்திக்கு முக்யசாதனங்கள் என்று முன் கூறப்பட்டிருக்கின்றது.

இந்தியாவிற் பருத்திவிளையும். ரஷ்யாவில் மண்ணெண்ணெய் விளையும். இந்தியாவுக்கு எண்ணெய்தேவை, ரஷ்யாவுக்குப் பருத்தி தேவை. இந்தியா தன் தேவைக்குமிகுதியான பருத்தியைக் கொடுத்து, ரஷ்யாவில் மிகுந்திருக்கும் மண்ணெண்ணெயை வாங்கிக் கொள்ளும். இது, இருதேசங்களிலும் மிகும்பொருள்கள், சேதமாகாமற் செலவாவதற்கும், இல்லாத பொருளை அன்னியநாட்டிலிருந்து சுலபமாய்த் தருவித்துக்கொள்ளுவதற்கும் அனுகூலமாயிருக்கிறது. இதனால் இருதேசங்களின்செல்வமும் விருத்தியடைகின்றது. இதே மாதிரி இங்கிலாந்தும் தன்னிடம் மிகுந்திருக்கும் நிலக்கரி, இரும்பு, துணிகள் முதலானசரக்குகளைத் தேவையான இடங்களுக்கு ஏற்றுமதிசெய்து, அவ்வவ்விடங்களில் மிகுந்தசரக்குகளைத் தனக்குத் தேவையானவளவு தருவித்துக்கொள்ளுகின்றது. இந்தியாவுக்கு, விசேஷமாய்த் தீப்பெட்டி, வாணவெடிகள்முதலானவை ஆஸ்டிரியா,

நார்வே, ஸ்வீடன், ஜப்பான்முதலான இடங்களிலிருந்தும், சிமினி முதலான கண்ணாடிச்சாமான்கள் ஜர்மனிமுதலான இடங்களிலிருந்தும், துணிகள், காகிதங்கள், புத்தகங்கள், இரும்புச்சாமான்கள் முதலியன இங்கிலாந்திலிருந்தும் இறக்குமதியாகின்றன. இந்தியாவிலிருந்து, பருத்தியும், நிலக்கடலை, கொப்பரைத்தேங்காய் முதலான எண்ணெய்வித்துக்களும், தேங்காய்மட்டை, சணல்முதலானசரக்குகளும், பலவகைத் தான்யங்களும் இதரதேசங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. இதுதான் அன்னியதேசவர்த்தகம்.

ஸ்வேச்சாவியாபாரமும் தடைவியாபாரமும்.
(Free Trade and Protection)

110. ஒருதேசத்திலுள்ளசரக்குகள் யாதொருதடையும், நிர்ப்பந்தமுமில்லாது அன்னியதேசத்துக்கு ஏற்றுமதியாய்விற்பனையாவது ஸ்வேச்சாவியாபாரமாகும். அப்படியல்லாது ஒருதேசச்சரக்கு மற்றொருதேசத்துக்கு ஏற்றுமதியாவதைக்குறைக்க, அதற்குவேண்டிய அளவு சுங்கம்முதலான வரிகள் ஏற்படுத்தப்படுவதே தடைவியாபாரம் எனப்படும்.

111. உதாரணம்:-நமதுதேசத்துக்குத் தீப்பெட்டிகள், ஆஸ்ட்ரியா ஸ்வீடன் ஜப்பான் என்னும் தேசங்களினின்றும் இறக்குமதியாகின்றன. அத்தேசத் தீப்பெட்டிகள், யாதொருசுங்கமுமில்லாமல் இறக்குமதியானால் பெட்டியொன்று பைசா வொன்றுவீதம் விற்கும். நமதுதேசத்திலேயே தீப்பெட்டித்தொழிற்சாலையொன்று நமதுதேசவியாபாரிகள் ஸ்தாபிப்பதாய்வைத்துக்கொள்வோம். புது ஆரம்பமானதாலும், பயிற்சிக்குறைவானதாலும், பெட்டியொன்று காலணாவுக்குக்குறையாமல் அடக்கமாகின்றது. இப்பொழுது காலணாவுக்கு விற்கும் உள்நாட்டுத்தீப்பெட்டியையும் 1-பைசாவுக்குவிற்கும் வெளிநாட்டுத்தீப்பெட்டியையும் போட்டிக்குவிட்டால், மலிவாயிருக்கும் வெளிநாட்டுத்தீப்பெட்டியைத்தான் ஜனங்கள் வாங்குவார்கள். உள்நாட்டுச்சரக்கு வாங்குவோரின்றிப் போட்டியாற் பாழாய்விடும். தீப்பெட்டிச்சாலையும் நொடித்துப்போம்.. இந்நிலைமையில், தீப்பெட்டி செய்வதே இந்தியாவிற் கடினமாய்விடும். தேசக்ஷேமத்தையும்,செல்வ

விருத்தியையுங் கருதும் ராஜாங்கத்தார் ஒருவித உபாயம் செய்வதுண்டு. வெளிநாட்டுத்தீப்பெட்டி அதிகமாய் இறக்குமதியாகாவண்ணம் பெட்டியொன்றுக்கு 2 அல்லது $2\frac{1}{2}$-பைசா சுங்கம்போட்டுவிடுவதுண்டு. அப்படிச்செய்தால், வெளிநாட்டுத்தீப்பெட்டியும், 3 அல்லது $3\frac{1}{2}$-பைசாவிற்கு விற்கத்தொடங்கும். போட்டிக்குறைவால் அப்பொழுது உள்நாட்டுச்சரக்கும் விற்க ஆரம்பிக்கும்.

112. இதுதான் தடைவியாபாரம் எனப்படும். இதனால் உள்நாட்டுவியாபாரத்துக்கு உதவியேற்படுகின்றது. இவ்வாறு சிறிது காலம்சென்றால், தொழிற்பயிற்சியாலும், தொழில்தெரிந்தோர்மிகுதியாலும் இந்தியாவிலேயே தீப்பெட்டியொன்று 1 அல்லது $\frac{3}{4}$ பைசா வீதம் விற்கக்கூடியநிலைமை வந்துவிடும். பிறகு தடையைவிலக்கி ஸ்வேச்சாவியாபாரம்வைத்தாலும் பாதகமில்லை.

நமதுதேசத்து டக்காமஸ்லின் முதலான இளந்துணிகள் விசேஷமாய் 100 வருஷங்களுக்குமுன் சீமையிற்செல்வாய், அவ்வூர்த் துணி நெசவுத்தொழிலுக்குப் போட்டியாயிருந்தது. இதேமாதிரித்தடையால், நமதுதேசத்துணிகள் ஏற்றுமதிகுறைந்து அவ்வூர்நெசவு விருத்தியடைந்தது.

113. தடைவியாபாரத்தாலுண்டாகும்பாதகம்:—மேற்கூறிய தடைவியாபாரம் தொழிலாளிகளுக்கும், வியாபாரிகளுக்கும் சாதகமானபோதிலும் பொதுவாய் வாங்குவோருக்குப் பாதகமாகும். ஒரு பைசாவுக்கு ஒருதீப்பெட்டிவாங்குவதைத்தவிர்த்து 3 பைசாவுக்கு வாங்கநேர்ந்தால், வாங்குவோருக்கு 2 பைசா நஷ்டந்தானே. மேலும், புதுத்தொழிற்சாலையிற் செய்யப்படும் பெட்டிகளின்தரமும் தாழ்ந்ததாயிருக்கலாம். சீமை 1703 நிர் மல் ரூ $7\frac{1}{2}$ வீதம் விற்கும்போது அதிற் பன்மடங்குதாழ்ந்ததான நாட்டுத்துணியை 10ரூபாய் கொடுத்து யாராவது வாங்குவார்களா?

114. இதற்கு ஒருவிடை :— ஸ்வேச்சாவியாபாரத்தால் ஒவ்வொருவரின் நன்மை கவனிக்கப்படுகின்றது. தடைவியாபாரத்தாலோ பொதுநன்மையும், தேசப்பொதுக்ஷேமமும் கருதப்படுகின்றது. சிறிதுகாலம் கஷ்டப்பட்டாலும் பிறகு அதேமாதிரிப்பெட்டி அதேகுறைந்தவிலைக்கு நமதுதேசத்திலேயே செய்யமுடியுமானால்,

அதைச்செய்யுங்கூலி நமதுதேசத்தாரையே சேருமல்லவா? நமது பணம் நமதுதேசத்தைவிட்டு அன்னியதேசத் தொழிலாளிகளுக்குப் போகுமானல், நமதுதேசத்தில் எண்ணிறந்தோர் வேலையில்லாமல் தவிப்பார்களல்லவா? மேலும், தடைவியாபாரத்தில், 1 பைசாவுக்குப் பதிலாய் 3 பைசாவீதம் கொடுப்பதிலுங்கூட இரண்டுபைசா நமது தேசத்திலேயேதானே இருக்கின்றது. ஆதலால் நமது தேசக்ஷேமத்தின்பொருட்டுச் சிலகாலம் தடைவியாபாரத்தாற் சிறிது கஷ்டப்படுவது நன்மையே.

115. தடைவியாபாரம் பொதுவிதியல்ல:—ஆனல், தடைவியாபாரம் அல்லது வியாபாரத்தடையென்பது எல்லாச்சரக்குக்கும் எல்லாத்தேசங்களிலும் வித்யாஸமன்னியில் அனுஷ்டிக்கத்தக்கதல்ல. இது, தேசத்துக்கும் விளைபொருள் செய்பொருள்களுக்கும் தக்கவாறு ஏற்படுகின்றது.

ஓர் இறக்குமதிச்சரக்குக்குத் தடைச்சுங்கம்போடுமுன் அதே சரக்கு நமதுதேசத்தில் இப்பொழுது இல்லாவிடினும் இன்னும் சிலகாலத்தில் நமதுதேசத்திலேயே உண்டாகலாமா என்பதைக் கவனிக்கவேண்டும். நமதுதேசத்தில் ஒருக்காலும் உண்டாக்கமுடியாதசரக்குகளுக்குத் தடைச்சுங்கம்போடுவது, ஜனங்களுக்குக் கஷ்டத்தையுண்டுபண்ணுவதுடன் தேசப் பொதுக்ஷேமத்தையும் பாதிக்கத்தக்கதாயிருக்கும்.

உதாரணம்:—சமுத்திரக்கரையில் உப்பளங்களில் ஏராளமாய் உப்புவிளையும். பாத்திகளிற் சமுத்திர உப்புத்தண்ணீரைப்பாய்ச்சி வைத்தால், சூரியவெப்பத்தாற் காய்ந்து உப்புக்குவிந்துவிடுகின்றது. அங்கே மணங்கொன்றுக்கு அரைரூபாய்தான் விலை. உப்புவரி ஒரு ரூபாய், ஆக மணங்கொன்றுக்கு (சுமார் 20 படிக்கு) $1\frac{1}{2}$ ரூபாய் கிரயமாகின்றது. இவ்வாறு தூத்துக்குடியில்விளையும் உப்பு, மைசூரில் படியொன்று ஒருஅணு அல்லது $1\frac{1}{4}$ அணுவீதம் விற்கும்.

மைசூர்த்தேசமோ சமுத்திரக்கரையில்லாததேசம். அங்கே உப்புமண்ணைக்காய்ச்சித்தான் உப்பெடுக்கவேண்டும். அதற்கு, விறகின்கிரயமுள்படச் செய்கூலி மணங்கொன்றுக்கு 5 ரூபாய்க்கு எக்காலத்திலும் குறையாது. இந்நிலைமையில், மைசூர் ராஜாங்கத்தார்

வெளியேயிருந்துவரும் உப்புக்குத் தடைச்சுங்கம்விதிக்கலாமா? மேற்கூறியகாரணத்தால், தடைச்சுங்கம்விதித்தல் கூடாது. இப்பொழுதில்லாவிட்டாலும் எப்பொழுதாவது மணுவொன்று $1\frac{1}{2}$-ரூபாய்க்குச் செய்யமுடியுமாஞல் அவ்வாறுசெய்வது நலம். அப்படியில்லாதநிலைமையில் உப்பு, தடையன்னியில் இறக்குமதிசெய்யப்படுவதே நலம்.

116. அன்னியவியாபாரம் இரண்டுதேசங்களுக்குமே நலம். விளைபொருளும் செய்பொருளும், நீர்வளம் நிலவளம் தொழில்முதலான சௌகர்யங்களைச் சார்ந்திருக்கின்றன. மலைப்ரதேசங்களில், காபி தேயிலை ப்ளுகம்முதலானவைகளும், தரைகளில் நெல் கோதுமை முதலானவைகளும், நீர்வளமுள்ள இடங்களில் நெல்முதலான நஞ்சைத்தானியங்களும், நீர்ப்பாசனங்களில்லாது வானம்பாரியாயுள்ள இடங்களில், எள், கடலைமுதலான புஞ்சைத்தானியங்களும், சீதோஷ்ணநிலைக்குத்தக்கவாறு உண்டாகின்றன.

நதிகள் ஏரிகள்முதலானவைகளாற் செழிப்புற்ற இடங்களில் நெல்முதலானவை பயிரிட்டால், கலமொன்றுக்கு 5 ரூபாய்தா னடங்கும். அதேமாதிரி, வானம்பாரியான இடங்களில் நிலக்கடலை பயிரிட்டால் ஒருரூபாய்க்கு 20படி கடலைவிற்கலாம். இவ்வாறுசெய்வது இருதேசங்களுக்கும் நன்மை. 100படிகடலையைக்கொடுத்து 1 கலம் நெல் வாங்கிக்கொள்ளலாம். அப்படியல்லாது, நீர்வளமில்லாத இடத்தில் இறைவை இறைத்தாவது நெல் சாகுபடிசெய்தால், ஒருகலம்நெல் 10 அல்லது 12 ரூபா யடங்கும். அதாவது 2 அல்லது $2\frac{1}{2}$-கலம் நெல் ஆதாயமடையவேண்டிய ச்ரமத்துக்கு ஒருகலநெல்ஆதாயந்தான் வருகின்றது. அப்படியல்லாமல், தண்ணீர்க்குறைவையுத்தேசித்துக் கடலைமுதலான புஞ்சைத்தானியம் பயிரிட்டால், 200 அல்லது 240 படி கடலை கிடைக்கும். அதைக்கொண்டு 2 அல்லது $2\frac{1}{2}$ கலம் நெல் வாங்கிக்கொள்ளலாம். இதுதான் அன்னியதேசவியாபாரத்தாலுண்டாகும் சாதகம்.

பரஸ்பரஉதவியும் பரஸ்பரநிர்ப்பந்தமும்.
(Reciprocity and Retaliation)

117. அன்னியவியாபாரமுறைகளை இவ்விருமுறைகளும் அதிகமாய்ச் சீர்திருத்துகின்றன.

'உன்தேசத்தில்வரும் என்சரக்குகளுக்கு நீ வரிமுதலான நிர்ப்பந்தங்களின்றி வேண்டியசௌகரியங்கள் செய்துகொடுத்தால் நானும் உன்சரக்குகளுக்கு வேண்டியசௌகரியம் செய்துகொடுக்கிறேன்' என்று சிநேகத்தாற் செய்துகொள்ளப்படும் ஏற்பாட்டுக்குப் பரஸ்பராவுதவியென்றும், நீ என்சரக்குக்குச் சுங்கம்முதலான தடைகள்செய்தால் நானும் உன்சரக்குகளுக்குத் தடைசெய்வேன் என்று பதிலுக்குப்பதில் எட்டிக்குப்போட்டியாய்ச்செய்வது பரஸ்பரநிர்ப்பந்தம் என்றும் சொல்லப்படும்.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.

MANUSCRIPTS NOV 1905

மதுரைத்தமிழ்ச்சங்கம்.

:(o):

1901-ம்வூ மேமீ 24உயில் நிலைநாட்டப்பெற்ற இச்சங்கம் பதின்மூன்றுவருஷங்களாக மதுரையில் நடைபெற்றுவருகின்றது. இச்சங்கத்தின் முக்கியநோக்கங்களை அக்காலத்திலேயே வெளியிட்டிருக்கிறார்கள் அவையாவன:—

(1) ஆங்கிலத் தமிழ்மாணவர்களுக்கும், தனித்தமிழ் மாணவர்களுக்கும் சங்கத்தார் தமிழிற் பரீக்ஷைகள்நடத்தி அவற்றில் தேறினவர்களுக்குப் பரிசும் யோக்கியதாபத்திரமுமளித்தல்.

(2) தமிழ்ப்பாஷைசம்பந்தமாகப் புத்தக ஆராய்ச்சி பாஷோற்பத்திதத்துவ ஆராய்ச்சி முதலிய ஆராய்ச்சிகள்செய்தல்.

(3) யாவராலுங் கொண்டாடப்படும் உபயோகமுள்ள பழைய தமிழ்நூல்களைப் பிரசுரப்படுத்தல். "செந்தமிழ்" என்னும் மாதாந்தப் பத்திரிகையை நடத்திவரல்.

(4) வடமொழி ஆங்கிலம்முதலிய அன்னியபாஷைகளினின்றும் நூல்களை மொழிபெயர்த்துத் தமிழறிவை வளர்த்தல்.

(5) தமிழ்ப்பாஷையிலுள்ளநூல்களைப் பரிசோதித்துப் பிழையறப்பதிப்பித்தல்.

(6) மதுரையிலும் மற்ற இடங்களிலும் பொதுஜன உபகாரமாகத் தமிழ்நூல்கள்நிரம்பிய புத்தகசாலைகளை அமைத்தல்.

(7) ஒரு செந்தமிழ்க்கலாசாலையைப் பரிபாலித்துவருதல்.

(8) மேற்கூறியநோக்கங்கள் செவ்வனே நிறைவேறுதற்கு இதர இடங்களிலும் கிளைச்சங்கங்களை நிலைநாட்டுதற்குவேண்டியவைகளைச் செய்தல் என்பனவாம்.

இந்நோக்கங்களை இதுகாறும் எம்மட்டிற் சங்கத்தார் நிறைவேற்றியிருக்கிறார்களென்று சற்று ஆராய்வேன்.

I. A. முதல்நோக்கமாகிய ஆங்கிலங்கற்கும் மாணவர்களுக்குத் தமிழிற் பரீக்ஷைகள்நடத்திப் பரிசளித்தல்முதலியன இப்போது தவறுதுநடந்துவருவது யாவரும் அறிந்தவிஷயமே.

ஆயினும், பரீக்ஷைக்குவருபவர்களின்தொகை வரவரக் குறைந்துகொண்டேவருவது மிகவுங் கவனிக்கத்தக்கதே. இதற்குக்காரணம் மாணவர்களின் சிரத்தைக்குறைவென்று சொன்னாலும், தமிழ்ப்பண்டிதர்களின் வன்மைக்குறைவே பெரும்பான்மை அதற்குக்காரணமாகிறது. பண்டிதர்சிலர்க்குத் தமிழ்ச்சங்கப்பரீக்ஷையென்றாற் பெரிய பயமேற்படுகின்றது. பிள்ளைகள் பரீக்ஷையில் தேறத்தவறினால், தங்கட்கு அவமானம்வருவதாக நினைக்கிறார்கள். இக்காரணம் பற்றியே செந்தமிழ்நாடாகிய பாண்டிநாட்டின் தலைநகரான மதுரையம்பதியைச் சுற்றியுள்ள பள்ளிக்கூடங்களிலிருந்து பரீக்ஷைக்கு வரும் மாணவர்களின்தொகை மிகக் குறைந்திருக்கிறது. மேலும், பண்டிதர்களிற் சிலரே ஊக்கமெடுத்துக்கொண்டு வேண்டுமளவு சங்கத்தின்கருத்துக்களை நிறைவேற்றுகிறார்கள். இனியேனும் ஒவ்வொரு தமிழ்ப்பண்டிதரும் முன்வந்து தம்மாலியன்றவுதவியைப் புரிவாரென்றும் உயர்தரக்கலாசாலை அதிகாரிகள் தத்தங் கலாசாலைகளுக்குத் தக்க தமிழ்ப்பண்டிதர்களைத் தெரிந்தெடுக்கமுயல்வார்களென்றும் நம்புகிறேன்.

I. B. இனி, ஆங்கிலங்கற்காத தனித்தமிழ்மாணவர்களுக்குத் தனித்தமிழ்ப்பரீக்ஷைகளும் ஒருவாறு நடந்தேறிவருகின்றன. சமீபத்திற் சென்னைச் சர்வகலாசாலையார், தமிழில் வித்வான்பரீக்ஷை வைத்துப் பட்டமளிப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அப்பரீக்ஷைக்குச்செல்லும் மாணவர்களுக்கு வடமொழியிலும் ஆங்கிலத்திலும் சொற்பப்பயிற்சிவேண்டியது இன்றியமையாததாகவிருக்கிறது. இதுவரை இத்தமிழ்ச்சங்கத்தார்நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் தேறியவர்களிற் பலர் ஆங்கிலக்கலாசாலைகளிலும், மற்றுமுள்ள பள்ளிக்கூடங்களிலும் உபாத்தியாயர்களாக இருந்துவருகிறார்கள். இவர்களிற் சிலரேனும் சென்னைச் சர்வகலாசாலையார் ஏற்படுத்தியுள்ள வித்வான்பரீக்ஷையில்தேறிப் பட்டம்பெறுவாராகில் அதனால் ஏற்படக்கூடிய உத்தியோகப்பயனை யடைவதுடன் மூன்றுபாஷைகளிலேற்படும் அறிவினால் முன்னிலும் அதிகமானபெருமைபெற்றுச் சிறந்து விளங்குவார்களென்பதில் ஐயமில்லை. இக்கருத்துக்கொண்டே மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரும் அப்பரீக்ஷைக்கும் மாணவர்களையனுப்பும் பொருட்டுச் சிறிதுகாலமாகக் கற்பிக்கப்படாதிருந்த ஆங்கிலம் வடமொழிகளுக்கும் சமீபத்தில் ஆசிரியர்களைநியமித்துச் செந்தமிழ்க் கலாசாலையை நடத்திவருகிறார்களென்று தெரிகிறேன். ஆயினும் மாணவர்தொகை குறைந்திருப்பதும் அவர்க்குக்கற்பிக்கப் போதுமான ஆசிரியர்களில்லாதிருப்பதும் பெருங்குறையாயிருக்கிறது.

செந்தமிழ்க்கலாசாலையில் வித்வான்பரீக்ஷைக்குப்படிப்பதற்கு வரையிட்டிருக்குங்காலம் மிகக்குறைந்துள்ளதென்பது என்கருத்து. தமிழ்கற்பதிற் பயனில்லையென்று மாணவர்கள்கருதுகிறார்களோ அல்லது சங்கத்தார் அவர்களைப்போஷிப்பதற்கு வேண்டியபொருளுதவி செய்யவில்லையோ அல்லது வேறு எக்காரணத்தினாலோ படிக்கும் மாணவர்களின்தொகை குறைவாயிருக்கிறதென்று தெரியவில்லை. தமிழ்நாட்டிலும் இதுபோன்று பல்வேறு கலாசாலைகளிருப்பதாகவும் வெளியாகவில்லை, ஆங்காங்குள்ள பற்பல சிறுதமிழ்ப்பள்ளிக்கூடங்களிலுள்ள உபாத்தியாயர்களும் பெற்றோர்களும் மதுரைத்தமிழ்ச்சங்கத்தைச்சார்ந்த செந்தமிழ்க்கலாசாலைக்கு மாணவர்களையனுப்பிப் பொருளுதவியும் இயன்றமட்டிற்புரிவாராயின் இக்குறைநீங்கி வித்வான்கள் அதிகமாகப்பெருகுவதற்கு வழியுண்டு. தமிழ்ச்சங்கத்தார் நோக்கமும் நன்றாய் நிறைவேறும்.

2. A. இரண்டாவதாகக்குறிப்பிட்ட நூலாராய்ச்சிசம்பந்தமாகவும், பாஷாதத்துவசம்பந்தமாகவும் சங்கத்தார்நோக்கம் நிறைவேறி வந்திருப்பதாக வெளியாகவில்லை. ஒருபாஷையிலுள்ள நூல்களின் சரித்திரம், கையெழுத்துப்பிரதிகளின்வரலாறு, ஒருகாவியத்திற்குப் பலவேறுபிரதிக ளேற்பட்டிருப்பதற்குக் காரணம், அக்கிரந்தங்கள் அச்சிடப்பட்டிருந்தால் அச்சிட்டகாலம், பாஷாபிவிர்த்தியைக் குறித்தும் அப்பாஷைபேசுபவர்களின் நாகரீகத்தைச்சுட்டியும் நூல்களினின்றுவெளியாகும் தத்துவங்களையும் சொற்களையும் எடுத்துக்காட்டிச் சரித்திரமுறையாக ஆராய்தல்முதலியவை நூலாராய்ச்சியில் அடங்குமென்றுகொள்ளலாம்.

தமிழ்ப்பாஷையிலுள்ள நூல்களைப்பற்றிய காலவரையறைகளைச் சங்கத்தார்செய்யாததனால் மற்றவர்கள் இயன்றவரை ஒருவாறு செய்ய முயன்றுவருகிறார்கள். அதனால் அபிப்பிராயபேதங்கள் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன.

மானிடஜாதிஸாஸ்திரம் (Ethnology) அக்ஷரதிஸாஸ்திரம் (Paleography) பாஷாதத்வஸாஸ்திரம் (Philology) புராதனவஸ்துஸாஸ்திரம் (Archeaology) சரித்திர ஆராய்ச்சிமுறை (Historic criticism) இவைகளில் விசேஷபாண்டித்தியமில்லாமற் கேவலம் ஒரு பாஷையின்பாண்டித்தியத்தைவைத்துக்கொண்டு நூல்களின் காலத்தை நிர்ணயிக்கப்புகுதல் அபிப்பிராயபேதத்தைப் பெருக்கும். அக்கலைகளைச் சிலர் நன்குகற்றுணர்ந்திருந்தாலும் ஆராய்ச்சிக்கு வேண்டிய சாதனங்கள்பலவும் இந்நாட்டில் இன்னும் பூரணமாக ஏற்படாததால் அவர் இவ்வித ஆராய்ச்சியில் இன்னும் புகவில்லையென்று தோன்றுகிறது.

ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் பயிற்சியுற்றவர்களும், தமிழில் மட்டும் பயிற்சியுள்ளவர்களுமான பலவித்வான்கள் நூலாராய்ச்சி செய்யப்புகுந்து சில அரசர்கள், வள்ளல்கள் இவர்கள்காலங்களையும், அவர்களின்பெருமைகளையும் நன்குவிளக்கியெழுதியுள்ளார்கள். இவ்வித ஆராய்ச்சியாற் சிலருடைய சரித்திரமும், வீரமும், கொடையும் நமக்கு வெளியாயினும் தமிழைப்பேசிவந்தஜாதியாரின் நடை உடை பாவனைகளைப்பற்றியும் அவர்கள்செய்த சீர்திருத்தங்களைப்பற்றியும்,

அவர்களடைந்த நாகரீகங்களைப்பற்றியும் அவர்கள் நூல்களினின்றும் நன்றாய் விரித்துக்காட்டுவோராயின் நம்முன்னவர் இவ்வளவு பெருமைவாய்ந்தவர்களாக இருந்தார்களென்பதையறிந்து நாம்ஆநந்தமடைவதற்கும், இனி நாம் மேனாட்டாரைப்போற் சிறந்துவிளங்குவதற்கு ஊக்கம்விளைவிக்கவும் அவை சாதனமாகவிருக்கும். இவை சம்பந்தமாக மற்றவர்களின் ஆராய்ச்சியின்பயனை யெதிர்பார்த்தே சங்கத்தார் அவ்வழிகளிற்புகாதிருக்கலாம்.

சங்கத்தார் ஏட்டுப்பிரதிகள் பல தேடிவைத்திருப்பினும் அவற்றின்விஷயச்சுருக்கத்தைக்குறித்துத் தொகுத்துக்காட்டினால், தமிழ்ப்பாஷையிலுள்ளநூல்கள் இன்னவையென்றும், இம்மட்டிற் பயன்படக்கூடியவையென்றும் அறிந்துகொள்வதற்கு ஏதுவாயிருக்கும். அச்சில்வெளிவராத சிலநூல்களைச் சங்கத்தார் அச்சிட்டிருப்பது போலவே இன்னும் அச்சிடவேண்டியபிரதிகள் அநேகமுள்ளனவாகக்கூறுவதால் அவைகளைப் பொருளுதவிபெற்று விரைவில் அச்சிட்டு வெளிவரச்செய்தல்வேண்டும்.

நூல்களை ஆராய்வதில் ஆசிரியர்கருத்து, சொல்லப்புகுந்த விஷயம், சொல்வதன்காரணம், சொல்லப்பட்டநீதிகள், ஏதாவது மாறுபாடாகக்கூறியிருந்தாற் காலம்பற்றி அவர் அவ்விதம்சொல்ல நேர்ந்தவிவரம், அவர் புதிதாக ஏதேனும் சொற்களையும் சொற்றொடர்களையும் பிரயோகித்திருந்தால் அவைகளின்தொகைகள், மற்ற ஆசிரியர்களுக்கும் அவருக்கும் மனோபாவம் நடை ஓசை இவைகளிலுள்ள வித்தியாசம், நயம் முதலியவைகளை விளக்கிக்காட்டுதல் ஆராய்ச்சியின்பயனாகும். அத்தகைய ஆராய்ச்சி தமிழிற் பெரும்பான்மை யில்லாததாற் சங்கவித்துவான்கள், மேற்கூறியமுறையைக் கைப்பிடித்துப் புதியவழிகளில் ஆராய்ச்சிசெய்து பிறர்க்கும் வழிகாட்டிகளாகித் தமிழ்ப்பாஷையைப் பெருமைப்படுத்துவார்களென்று நம்புகிறேன்.

2. B. இரண்டாவதுநோக்கத்தில் மற்றொருபாகமாகிய பாஷோத்பத்திதத்துவசம்பந்தமாகச் சங்கத்தார் ஆராய்ச்சிகள் செய்திலர். அபிதானசிந்தாமணியும், அகராதியும் தமிழர்க்கு மிகவும் பயன்கொடுக்கக்கூடியனவே. ஆயினும், அவை அதிகமாக் இவ்வாராய்ச்சி

யைமுற்றுவிக்கா. திசைச்சொல் வடசொல்போதிந்திருப்பதாகக் கூறும் தென்மொழியிலுள்ளசொற்களிற் சிலவற்றிற்கேனும் உற்பத்திவிவரம் சங்கத்தார் தொகுத்துக்காட்டியிருப்பதாகத் தெரியவில்லை. மதுரைத்தமிழ்ச்சங்க மேற்படுவதற்கு வெகுகாலத்திற்கு முன்னமே சிலவித்துவான்கள், தமிழ் தனிப்பாஷையா? அல்லது வடமொழியிலிருந்து ஏற்பட்டதா? என்று ஒருவருக்கொருவர் தர்க்கித்துக்கொண்டு காலங்களைக் கழித்துவந்தார்கள். இன்னும் அவ்வாதம் நிற்கவில்லை. சிலர், வடமொழிக்கு ஏதோ ஏற்றமிருப்பதாகத் தாங்கொள்வதால் அவ்வித ஏற்றத்தைத் தென்மொழிக்கும் உண்டாக்கிவிட்டாற் றமிழுக்குச் சகல அபிவிருத்தி மேற்பட்டுவிடுமெனக்கருதி வடமொழியிற்போலத் தென்மொழியிலும் சொற்களுக்கெல்லாம் முதனிலைகற்பிக்க முயல்கின்றார்கள். அவை ஸ்வயகற்பனையாகாமல் எல்லோராலுங்கொள்ளும்படி உண்மையாயிருந்தாலன்றி இம்முயற்சி பயன்படமாட்டாது. ஆதலால், பாஷோத்பத்திதத்துவம் அறிய வேண்டுமென்றால், தமிழறிவுமட்டும் போதாது. வடமொழிப்பயிற்சியும், தெலுங்கு, கன்னடம், துளுவம் முதலிய பாஷைகளில் அறிவும் இன்னும் சரித்திர ஆராய்ச்சியால், தமிழர் குடியேறியிருந்தநாடுகளிலும் வியாபாரமுறையாகச்சென்றநாடுகளிலும் எவ்வெப்பாஷைகள் வழங்கிவந்தனவோ அவ்வப்பாஷைகளில் தேர்ச்சியும், சப்தோத்பத்தி தத்துவசாஸ்திரத்தில் தேர்ச்சியும்பெற்றே இத்தகைய ஆராய்ச்சியில் முயலவேண்டியிருக்கிறது. சகலகலைகளும் உண்மையறிவையும் சத்தியத்தையும் வெளிப்படுத்தி, உலகத்தார் இயன்றமட்டில் இம்மை மறுமைப்பயன்களையடைவதற்குக் கருவிகளாகநிற்பதால் அவ்வுண்மைக்கு அனுகுணமான துறைகளிற் பிரவர்த்திப்பதே சான்றோர் கடமை.

3. A. மூன்றாவதுநோக்கமாகிய பழைய ஏடுகளைத்தேடி உபயோகப்படக்கூடியவற்றைப் பிரசுரப்படுத்துதலும், "செந்தமிழ்" என்ற மாதாந்தப்பத்திரிகையை நடத்துதலும் ஒருவாறு நிறைவேறி வருகின்றன. தனிப்புத்தகங்களாகவும், செந்தமிழ்ப்பிரசுரங்களாகவும் இதுவரை உத்தேசம், ஐம்பதுநூல்கள் வெளிவந்திருக்கின்றன. சங்கத்தில் தேடிவைக்கப்பட்டுள்ள ஏட்டுப்பிரதி, காகிதப்பிரதிநூல்களிற் பலர்க்கும் உபயோகப்படத்தக்கனவும், விரைவில் அச்சிட்டு

வெளியிடவேண்டியவையுமான சிறந்தநூல்கள் இன்னின்னவை யென்றுதெரிய வழியில்லை. இவ்வாண்டில் நடந்தேறிய வருஷோத்ஸவத்தில்(Literary Board)கல்விநிர்வாகசபையொன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அச்சபையார் இப்பிரதிகளை யாராய்ந்து அச்சிடத்தக்கவைகளைக் குறிப்பிட்டுக் கூடியவிரைவில் அவற்றை அச்சிடவேண்டியதற்கான உபாயங்களைத் தேடுவார்களென்றும், அவர்களுக்கேற்பட்டகடமைகளில் இதுவும் ஒன்றென்றும் நினைக்கிறேன். ஏனைய இடங்களிற் கிடைக்கக்கூடிய பிரதிகளையும் சம்பாதித்து அச்சிடவேண்டியதும் அவர்கள் கடமையேயாம்.

3. B. "செந்தமிழ்"ப்பத்திரிகையும் இப்பன்னிரண்டாண்டுகளாக மாதந்தோறும் வெளிவந்துகொண்டிருக்கின்றது. அதில் அரிய பெரியவிஷயங்கள் எழுதப்பட்டுவருவதில் ஐயமில்லை. நடையும் "செந்தமிழ்" என்னும் பெயர்க்கியையவே பெரும்பாலும் அமைந்துள்ளது. ஆயினும் இக்காலத்துவழங்கிவருந் தமிழுக்குச் செந்தமிழ் நடை சற்றுக் கடினமாகவிருப்பதாகச் சிலர் அபிப்பிராயப்படுவதுடன் விஷயங்களும் பெரும்பான்மை பழைய இலக்கிய இலக்கணங்களைப் பற்றியும், சிறுபான்மை மதசம்பந்தங்களைப்பற்றியும், நீதி, ஒழுக்கங்களைப்பற்றியுமே எழுதப்பட்டுவருவதாகவும், இக்காலத்திய புதிய விஷயங்களும், சாஸ்திர அபிவிருத்திக்கேற்பனவும் வேண்டுமளவு எழுதப்படாமையின், படிப்பவருக்கு இன்பமும் ஊக்கமும் ஏற்படவில்லையெனவும் சொல்லுகிறார்கள். வேறுசிலர், தமிழ்நாட்டைப்பற்றியும் தமிழ்வேந்தர்களைப்பற்றியும் சிலாசாசனங்கள் கிடைத்தால் அவைகளைக் கருவியாகக்கொண்டு தமிழரசர்களின்பெருமையும், அவர்கள் பாவல்லரைப்போற்றிவந்த சிறப்பும் விஷயமாகப் பலபாடல்களின் ஆதாரத்தோடு அவருடையகாலங்களைவரையறைசெய்து சரித்திரங்களை யெழுதுகிறார்கள். இவ்வாறு எழுதும் விஷயங்கள் ஒருவாறு நமக்கு அவசியமாயினும் அவை இக்காலத்துக்கு எவ்வாறு பயன்படும்? அதனால், தமிழ் எவ்வாறு விருத்தியாகும்? அதனால் ஜனங்கள், எவ்வழியிற் சீர்திருந்துவார்கள்? நவீனநாகரீகங்களுக்கும், ஜீவனோபாயங்களுக்கும், ஆசாரவியவகாரங்களுக்கும் தகுந்தபடி காலபேதத்தையனுசரித்து எவ்வாறு "செந்தமிழ்" உதவிபுரிந்துவருகின்றது, என்பனவாதிய பலகேள்விகளைக் கேட்க இடமுண்டாகின்றது.

இப்பத்திரிகையைச் சங்கத்தார் வெளியிடுவதில், தமிழ்ப்பாஷை யின் இலக்கிய இலக்கண ஆராய்ச்சியே முக்கியகருத்தாகலின் அக் கருத்திற்கியைய வித்வான்களே ஒருவரையொருவர் வியந்துகொள் ளக்கூடிய விஷயங்களை உயர்ந்தநடையில் எழுதுவதுதான் முறை யெனக்கொண்டால் மேலேகாட்டிய கேள்விகளுக்கு இடமில்லை.

ஆயின் இலக்கிய இலக்கணங்களைக் கசடறக்கற்றோரேயன்றிச் சாமானியராகிய மற்றோரும் ஒருவாறு படித்தறிந்துகொள்ளக்கூடிய விஷயங்களையும், இக்காலத்திய நாகரீகங்களையும் அபிப்பிராயங்களை யுந் தழுவிப் புதியமுறையில் விஷயங்களையெழுதித் தமிழைவளர்த் தல் சங்கத்தார்கடமையென்றுகொண்டாலன்றி, மேற்கூறிய கேள் விகளுக்குத் திருப்திகரமான மறுமொழிகூறுதல் சாத்தியமில்லையென் பது திண்ணம்.

இவ்விந்தியா தேசத்தில் ஆத்மதத்வவிசாரசம்பந்தமாகப் பலசாஸ் திரங்களும் கொள்கைகளும், வியவகாரங்களும் ஏற்பட்டிருப்பதால் அதன்சம்பந்தமாக நூதனமாக விருத்திக்குக்கொண்டுவரவேண்டுவ தொன்றுமில்லை. முன் எழுதியுள்ளவிஷயங்களைத் தற்காலத்தில் மேனாட்டார்கைக்கொள்ளும் புதியமுறைகளால் அறிந்துகொள்ள முயலுதல் போதுமானது.

ஜடவர்க்கங்களைப்பற்றியும், ஜீவவர்க்கங்களைப்பற்றியும், அவை களை அபிவிருத்திசெய்யவேண்டிய வழிகளைப்பற்றியும் இந்நாட்டில் சாஸ்திரங்கள் அதிகமாக ஏற்பட்டிருந்ததாகவெளியாகவில்லை. பண் டைக்காலங்களில் இவைகள் இருந்திருப்பினும் பிரசுரமாகாமலும் விருத்தியடையாமலும் அழிந்துபோயிருக்கலாம். அதற்குக்காரணம் உண்மையில் எதுவாயிருக்கலாமென்று நாம் இங்கு விசாரிக்கவேண் டுவதில்லை. ஆராயுமிடத்து அவ்விதமான சாஸ்திரங்களொன்றும் நமக்குப் புலப்படவில்லையென்று உறுதியாய்ச்சொல்லலாம். மானிடர் நான்குவருணத்தாரெனவும், ஒவ்வொருவருணத்தாருக்கும் உரிய கடமைகள் இவையெனவும் பண்டைநூல்களிற்படிக்கிறோம். முற் காலத்து, பிராமணர்கள் பிறரால் தானமாகக் கொடுக்கப்பட்டபொ ருள்களைக்கொண்டு காலக்ஷேபம்செய்துவந்தார்கள். க்ஷத்திரியர்கள் போர்வீரர்களாக ராஜ்யங்களைப் பாதுகாத்துவந்தார்கள். வைசியர்கள்

வர்த்தகஞ்செய்துவந்தார்கள். சூத்திரர்கள் வியவசாயம் முதலியன செய்துவந்தார்கள். தற்காலத்திலோ இன்னவருணத்தார் இன்ன தொழிலைச்செய்வதென்ற வரையறையில்லை. யாவரும் ஜீவனோபாயத்திற்கான எந்தத்தொழிலையாவது முதலிற்றேடிக்கொண்டே பின்னர் ஆத்மவிசாரஞ்செய்யவேண்டியநிலைமையி லிருக்கிறார்கள். ஆதலின் ஜடவர்க்கசாஸ்திரங்களிற் பயிற்சியில்லாவிட்டால் இக்காலத்தில் நம்மவர்க்கு அறிவும் ஜீவனோபாயமும் குறைவுபடும். இத்தகைய குறைகளை நீக்கச் "செந்தமிழ்" முயலாவிடின் அதை நடத்தும் பயன்தான் என்னை? அறிவுவளர வழிதேடாவிட்டால், பாஷாபிவிருத்தி எவ்விதம் கைகூடும்.

ஜடவர்க்கசாஸ்திரங்களின் அபிவிருத்தி அவசியமென்றால் அன்னியபாஷைகளினின்றும் அப்புத்தகங்களை மொழிபெயர்த்தோ அல்லது அவற்றிலுள்ள அபிப்பிராயங்களைவாங்கியோ தமிழிற் புத்தகங்களையெழுதித் தமிழறிவை விருத்திசெய்யவேண்டும். அவ்வாறு விருத்திசெய்வது ஆங்கிலப்பயிற்சியிற்சிறந்த தமிழரின்கடமையாம். அவர் அவ்வுதவிபுரியாவிட்டால், தமிழறிவு வளரவும் பிரகாசிக்கவும் இடமில்லையென்பது துணிபு. ஆதலால், ஆங்கிலங்கற்றவர்கள் முன்வந்து ஜடவர்க்கசாஸ்திரங்களை மொழிபெயர்த்தாவது அல்லது அபிப்பிராயங்களை ஆராய்ந்தறிந்தாவது "செந்தமிழ்"ப்பத்திரிகைக்குப் பலவிதமான விஷயதானங்களை எளியநடையிற் பலரும் அறிந்துகொள்ளும்படி எழுதினாலொழியச் "செந்தமிழ்"செய்யும் உபகாரம் அதிகமாகமாட்டாதென்றேகொள்ளவேண்டும். இந்த விஷயத்திற் சங்கத்தார் பெருமுயற்சி யெடுத்துக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

இன்னும், தமிழ்ப்பாஷை வளரவேண்டுமானால் முற்காலத்தில் வடசொல், திசைச்சொற்களைக் கைக்கொண்டு நாளடைவில் முன்னைய வடிவத்தைமாற்றித் தமிழ்ச்சொல்லாக அவற்றை விளங்கச்செய்தது போலவே, இக்காலத்தும் ஆங்கிலமுதலிய அன்னியபாஷைகளினின்றும் நமக்கு இன்றியமையாதசொற்களையேற்று அச்சொற்களைத் தமிழிற்கேற்ப மாற்றிவழங்கவேண்டுமென்பது சிலர்கொள்கை. இது பண்டைக்காலந்தொட்டு அடிப்பட்டவழக்காயுமிருக்கிறதென்பது பின்வருமாற்றால் விளங்கும்.

பலபொருள்குறித்த ஒருசொல்லும் ஒருபொருள்குறித்த பல சொற்களும் ஒன்றற்கொன்று எவ்விதசம்பந்தமுமில்லாமல், தமிழிற் செறிந்திருக்கின்றன. அவை, அயல்நாடுகளில் வழங்கிவந்த பலபாஷைகளிலுள்ள சொற்களையும் தமிழர் அபகரித்துத் தமிழுக் கேற்ப மாற்றிக்கொண்டார்களென்பதற்குப் போதியசான்றாகும். இவ்விதமானசொற்களின் ஆதிநிலைமையையறியப் பிரயாசைப்பட்டாற் பலவிதவுண்மைகள்வெளியாகும். தமிழுக்கேயுரிய வேற்றுமை யுருபையும் வினையுருபையும் கைவிடாது பற்றிக்கொண்டால் எப்பாஷையிலிருந்து சொற்களைத் தமிழுக்குக்கொண்டுவந்தாலும் தமிழ்ப்பாஷை லோபமடையாதென்பது திண்ணம்.

நான்சர்வக்ஞன் என்று கருதுபவனும், எனதுபாஷை சம்பூரணமானதென்று கருதுபவனும் ஒரேநிலையிலுள்ளவர்களாவர். அந்நிலை அசம்பாவிதமான நிலையென்று யாவரும் அறிவர். தமிழ்க்கடலைக் கரைகண்டவித்வான்களும் அக்கடல் "குணகடல் குமரி குடகம் வேங்கடம்" என்ற இந் நான்கெல்லைக்குட்பட்டிருப்பதால் அக்கடலின் அப்பாலிருக்கும் பல பாஷாசமுத்திரங்களுடன் அதை ஒப்பிட்டுச் சீர்தூக்கி, தமிழ்க்கடலும் அவற்றின்முன் ஒருகூபமேயாமெனக் கருதுவாராயின், தமிழ் அபிவிருத்தியடைவதற் கொரு பெருங்காரணமாகும்.

நேதி, நேதி என்றுசொல்லுவதாற் சர்வேஸ்வரனுக்கேற்படும் பெருமையும், கசடறக்கற்றுணர்ந்தஞானிகள் அறிந்திலேன் அறிந்திலேன் என்றுகூறுவதால் அவர்களுக்கேற்படும் மேம்பாடும் யாவரும் அறிவர். "கல்விகரையில கற்பவர்நாள்சில" என்பதும் இங்கு உற்று நோக்கத்தக்கது. ஆகர்ஷணசக்தி—(gravitative) கமனம்......... முதலிய கதிசாஸ்திரங்களின் பிரபாவத்தை உலகத்தாருக்கு முதன் முதல் வெளிப்படுத்திக்காட்டின ஆங்கிலசாஸ்திரியான நியூட்டன் (Newton) என்னும் மகானும் "உண்மையென்னும்பெருங்கடல் நம் முன்னிற்க அதினின்றும் வீசிவரும் அலைகளினால் ஒதுக்கப்பட்ட சிற்சில பருக்கைக்கற்களைப் பொறுக்கும் சிற்றறிவினன் யான்" என்று கூறியிருக்கிறார். தவிரவும் இப்போது அன்னியபாஷைகளில் அபிவிருத்தியாயிருக்கும் பற்பலசாஸ்திரங்களை யுற்றுநோக்கின், தமிழிலிருந்து தெரிந்துகொள்ளக்கூடிய பூத, பௌதிகசாஸ்திரங்களின்

சிறுமை நன்குதெளியலாகும். நாம் தினம் ஏறிச்செல்லும் புகை வண்டியின்றன்மையும், பல்லாயிரநாழிகைவழிதூரங்களுக்கப்பால் நடக்கும் சங்கதிகளை விஞடியில் நமக்கு வெளிப்படுத்தும் மின்சாரத் தின்பெருமையும் நாம் அபிமானித்துவரும் நமது உடலிலுள்ள அவ யவங்களின் நிலை, அமைதி, தோற்றம், செய்கை, தன்மைமுதலிய வற்றின்ஞானமும், நாம் நாள்தோறும் உடுத்திக்களையும் வஸ்திரங் களைச்செய்யும் இயந்திரங்களின் லக்ஷணமும், பல ரசாயனங்களின் பாகுபாடும் தமிழ்க்கடலின்மட்டுமேநீந்தினுல், பிரகிருதநிலைமையில் அறிந்துகொள்ளலுங் கூடுமோ?

4. நான்காவது நோக்கமாவது இதரபாஷைகளினின்றும் நூல் களைமொழிபெயர்த்துத் தமிழைவளர்த்தலாம். மேலே "செந்தமிழ்"ப் பத்திரிகை என்பதனையொட்டி இதைக்குறித்தும் சிறிது கூறியிருக்கி றேன். ஆயினும், மொழிபெயர்த்தலின் அவசியத்தைக்குறித்து வற்புறுத்திக்கூறவேண்டியிருத்தலின் இப்போது தமிழ்ப்பாஷையை மட்டும்படித்தலால் அறிவு எம்மட்டுவிருத்தியாகும் என்பதை முத லிற்றெரிந்துகொள்வது நலமாகும். கறையானுக்கும் இராமபாணத் துக்கும் தப்பிப்பிழைத்து வெளிவந்துள்ள முக்கியகிரந்தங்கள்: இலக் கணங்களில்:—தொல்காப்பியம், அதன் உரைகள், நன்னூல், யாப் பருங்கலம், தண்டியலங்காரம், இறையனாகப்பொருள், நம்பியகப் பொருள், வீரசோழியம், இலக்கணவிளக்கம் முதலியன. இலக்கியங் களில் நீதிநூல்கள்:—திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இனியதுநாற்பது, இன்னாநாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, ஆத்திசூடிமுதலியன. காவியங்களென்றுகொண்டாடப்பெறுவன:- சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், வில்லி பாரதம் முதலியன. இத்தகைய நூல்களைத்தவிர மதசம்பந்தமாகத் தேவாரம், திருவாசகம், பெரியபுராணம்முதலிய சைவநூல்களும், திருவாய்மொழி முதலிய வைஷ்ணவநூல்களும் உள்ளன.

மேற்கூறிய நூல்களை ஒருவன் முறையாகப்படித்தாற் பெரும் பாலார் அவனைத் தமிழ்வித்வானென்று சொல்லுவார்கள். மற்றைய சிறுநூல்கள் இவைகளைப் பின்பற்றிவருதலின், குறிக்கப்படவில்லை. இவ்வளவுபடித்தமாத்திரத்திற் பல சாஸ்திரங்களிலும் சொல்லப்பட் டுள்ள பல விஷயங்களையும் அறிந்துகொள்ள முடியுமா?

முத்தமிழென்பன் இயல் இசை நாடகமென்று யாவருஞ்சொல்லுகிறார்கள். அவற்றுள் இயற்றமிழின்பாகுபாட்டிற் செய்யுளும் நடையும் அடங்கிவிடுகின்றன. ஒழிந்த இசைத்தமிழ் நாடகத்தமிழ்கள் எவை? அவை பண்டுதொட்டு எவ்வாறுவழங்கிவந்தன? அவை அழிவதற்குக்காரணம் என்ன? என்பவை நன்குவிளங்கவில்லை. இசைத்தமிழ் நாடகத்தமிழ்கள் சிறப்புற்றோங்கியகாலங்களையும், அவைகளை நாம் இழக்கநேர்ந்த காரணங்களையும், அவைகளை யுயிர்ப்பிக்கும் முறைகளையும்பற்றி இக்காலத்து நூலாராய்ச்சிசெய்யும் வித்வான்கள் ஒருவாறு தொகுத்துக்கூறுவாராயின் அது தமிழபிவிருத்திக்கு ஒரு சிறந்த உபாயமாகும்.

தமிழர்கள்; நூலாற்சொல்லப்படும் அறம்பொருளின்பங்களுள் இன்பத்தை அகமெனவும், அறம் பொருள்களைப் புறமெனவும் பாகுபாடுசெய்திருக்கிறார்கள். நிலங்களை ஐவகையாகப்பகுத்து ஒவ்வொரு நிலத்திற்குமுரிய மனிதர்கள், அவர்செய்யுந் தொழில்கள், அங்குள்ள பறவைகள், மிருகங்கள், விருக்ஷங்கள்முதலியன இன்னவையென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசர்களையும் மற்றும் பெருமைவாய்ந்த வள்ளல்களையும், அவர்களுடைய மறம், கொடை, செல்வம்முதலியவற்றைப் புகழ்ந்துகூறுவதே புறப்பொருளினியல்பாகவிருக்கின்றது.

அகப்பொருளென்பது உள்ளநிகழ்ச்சியைத்தெரிவிப்பது. அது தலைவன் தலைவியர்க்கேயுரித்தானமையால் இடம் காலம்பற்றி யொருவர்க்கொருவர்பாராட்டும் பலவுணர்ச்சிகளையும், இன்பத்துன்பங்களையும் குறிப்பதேயாம். தமிழ்மக்கள் மிகுதியும் இவ் வகப்பொருளின் சுவையி லீடுபட்டுவந்தமையால், தமிழ்நூல்களி லொருசில கோவை உலா பள் காதல்முதலிய சிற்றின்பங்கருதிய மானிடத்தோத்திரங்களா யமைந்துள்ளன. இவ்விதநூல்கள், பல்வேறுதுறைகள்பயின்று வமைசெறிந்துவிளங்கினும், அவற்றாலெய்தும்பயன். சிறிதாகவே முடிகின்றது.

இவற்றையொழிய வெவ்வேறுவிஷயங்களடங்கிய பலதிறப்பட்ட நூல்கள் தமிழில் இல்லையென்றுசொல்லிவிட்டால், தமிழர்கள் வீடுகள்கட்டவில்லையா? வைத்தியஞ்செய்துகொள்ளவில்லையா? நடிக்கவில்லையா? சங்கீதம்படிக்கவில்லையா? வியாபாரங்கள்செய்யவில்லையா?

பொருள்சம்பாதிக்கவில்லையா? வியவசாயஞ்செய்யவில்லையா? ஆடையாபரணங்கள் தரித்துக்கொள்ளவில்லையா? கப்பல்களேறிச்செல்லவில்லையா? காலவரையறை யறிந்துகொள்ளவில்லையா? ராஜ்யபரிபாலனஞ் செய்யவில்லையா? எனப் பலகேள்விகள் தோன்றுகின்றன.

இக்கேள்விகளுக்கு மறுமொழியாக "மேற்கூறியநூல்களெல்லாம் முன்னர்த் தமிழிலிருந்தனவென்றேவைத்துக்கொள்வோம். அவை, ஏன் இக்காலத் தில்லாமற்போகவேண்டும்? என்றும் பல அபிப்பிராய பேதங்கள் எழுகின்றன.

தமிழில் வசனநடை விருத்தியாகாமற் செய்யுணடைமட்டும் விருத்தியாய்வந்ததால் முன்னிருந்த நூல்களெல்லாம் செய்யுளிலமைந்து பின்னுள்ளோர்க்கும் சாமான்ய அறிவினர்க்கும் பொருள் விளங்காது அழிந்துபோய்விட்டனவென்று பலர்கூறுவர்.

வேறுசிலர்; சொற்சுவை பொருட்சுவை செறிந்திருந்தாலும் அச்சேறாத துர்ப்பாக்கியத்தாற் பலநூல்கள் சிலகாலம் மனப்பாடமாகப் பயிலப்பட்டு முடிவில் இறந்துவிட்டனவென்று வேறுகாரணங் கூறுவர்.

எது எவ்வாறாயினுமாக, ஒருகூட்டத்தார் தாமும் தமது தாய்ப் பாஷையும் விருத்தியடையவேண்டுமென்றாலும், நாகரீகமடைய விரும்பினாலும் வசனநடையில் யாவர்க்கும்புலப்படுமாறு நூல்களெழுதாவிட்டா லவர்க ளொருபோதும் முன்னுக்குவரமாட்டார்களென்று சரித்திர ஆராய்ச்சிவல்லவர்கள் கூறுகின்றார்கள்.

ஆதலால் இனியேனும் தமிழுக்கு அவ்விதக்குறைவராது தெளிவானவசனநடையில் நூல்களெழுதித் தமிழைப் பாதுகாத்தல் தமிழர்கடனாகும்.

பலவிதமான கல்வித்துறைகளில் இறங்கி ஆங்கிலங்கற்றதமிழர் அவ்வத்துறைகளிலுள்ள பலநூல்களையும் எளியதமிழ்நடையிற் பல்லோர்க்கும் பயன்படுமாறு மொழிபெயர்த்தல் மிகவும் அவசியம். கூடியசீக்கிரத்தில் இது கைகூடுமென்று நம்புகிறேன். இவ்விஷயத்தில் நமதுதேசவாசிகளாகிய ஆந்திரர்செய்துவரும் முயற்சியைச் சற்றுக் கவனித்தால் நமக்கு அதிக ஊக்கமுண்டாகும். ஆந்திரநூல்க

ளெல்லாம் தமிழ்நூல்களைப்போல அவ்வளவு பழமையானவையல்ல. தமிழர்களைப்போலவே வடமொழிநூல்களையும் வடமொழிப்புராணங்களையும் மொழிபெயர்த்துச் செய்யுளாகச்செய்வதே இதுவரை ஆந்திரர்களுக்குப் பொழுதுபோக்காகவிருந்தது. இப்பொழுதோ ஆங்கிலங்கற்பதனாலுண்டாம்பயன்களை முதன்முதல் அறிந்தவர்கள் ஆந்திரர்களே என்று பலரும் தெரிந்துகொள்ளுமாறு பல்வேறுதுறைகளில் அவர்கள் வேலைசெய்துவருகிறார்கள். தற்கால நாகரீகக்கொள்கைகள்பல தெலுங்கிலேறிவிட்டன. பலநூல்கள் மொழிபெயர்த்தெழுதப்பட்டு அவர்களுக்குச் சொந்தமாகிவிட்டன. பல வசன நடைப்புத்தகங்கள் எழுதப்பட்டுப் பண்டிதர்களாலும் பாமரர்களாலும் பயிலப்பட்டுவருகின்றன. பல இடங்களிற் கலாசாலைகள் ஸ்தாபித்து மாணவர்களுக்குப் பாடங்களனைத்தையும் தெலுங்கிலேயே கற்பித்துவருகிறார்கள். ஆங்கிலத்திலுள்ள புத்தகங்களெல்லாந் தெலுங்கிலுமுள்ளன. தெலுங்கிற் பத்திரிகைகள் பலவுள்ளன. அவற்றை விலைகொடுத்துவாங்கிப்படிப்போரின்தொகை, உயர்ந்த ஆங்கிலப்பத்திரிகையைவாங்கிப்படிப்போரின் தொகைக்குச் சிறிதும் பின்வாங்காது. ஐக்கியசம்பந்தமாகவும், ஆசாரச்சீர்திருத்தசம்பந்தமாகவும், கல்வியறிவு அபிவிருத்திசம்பந்தமாகவும், தேசபாஷாபிவிருத்திசம்பந்தமாகவும் அவர்கள்செய்யும் முயற்சியை நாமும் கைக்கொண்டாற் கூடியவிரைவில் தமிழ்நாடும் தமிழ்ப்பாஷையும் முன்னுக்குவருமென்பதற்குத் தடையில்லை. ஆந்திரர்களுக்குள், சில மகான்கள் தலைமையாகவிருந்து மேற்கூறியதுறைகளில் உழைத்துவருகிறார்கள். அவர்களைப்பின்பற்றிப் பல ஆந்திரர்கள் அவர்கள் சுட்டியவழிகளில் ஊக்கத்துடன் செல்கிறார்கள். அவர்களுக்குள்ள ஊக்கத்தில் ஒருசிறிதேனும் நாம்பெற்றால் எவ்வளவோ மேன்மைபெறவழியுண்டு.

5. இனி ஐந்தாவதாகக்கூறப்பட்ட "தமிழ்நூல்களை ஆராய்ச்சிசெய்து பிழையறப்பதிப்பித்தல்" என்பதைப்பற்றி நாம் விரிவாக ஒன்றுஞ் சொல்லவேண்டுவதில்லை. இவ்விதக்காரியங்களைச்செய்வதில் தமிழ்ச்சங்கத்தாருக் குள்ள ஊக்கம் பலர்க்குந்தெரிந்ததே. ஆயினும் பதிப்பிக்கும்விஷயத்தில் ஒரு முறைவேண்டும். பரிசோதிப்பதிலும் ஒருவரைக்கொண்டுபரிசோதித்தல் போதாது. இவ்வருஷம் புத்தக

பரிசோதனைக்கும், விஷயபரிசோதனைக்கும் ஒரு வித்வத்ஸபையேற் பட்டிருப்பது மிகவும்நல்லதே. ஆயினும் வித்வத்ஸபையாரனைவரும் சேர்ந்து ஒத்துப்பார்த்துப் பதிப்பித்தாலொழியச் சங்கத்தினின்று பிரசுரமாகும் புத்தகங்களுக்கு மதிப்பு ஏற்படாது. இதுநிற்க; தம் மிடத்துள்ள ஒவ்வொரு ஏடுகளையும் தாம் எழுதியுள்ள ஒவ்வொரு புத்தகங்களையும் தாமே பதிப்பித்தல் ஒருவர்க்கும் சாத்தியமாகாது. முதற்கருவியாக நீண்டஆயுள்வேண்டும். இரண்டாவது அதிகப் பணம்வேண்டும். மூன்றாவது உதவிபுரியத் தகுந்த கல்விமான்கள் வேண்டும். நான்காவது விரைவில் வேலைசெய்யக்கூடிய அச்சுச்சாலை வேண்டும். இவையெல்லாம் ஒருங்கே ஒருசிறிதுபொருந்தியுள்ளது நம் மதுரைத்தமிழ்ச்சங்கமே. ஆதலின், தமிழ்ச்சங்கத்தார், அன் னோர்க்கு வேண்டும்பொருளுதவிசெய்து சிறந்தநூல்களைத் தமிழ்ச் சங்கவாயிலாக (அவர்களுடையபேராலேயே) வெளியேற்றுவதுடன் அவைகளை விரைவில் விற்பதற்குவேண்டியவழிகளையும் தேடவேண் டும். அதற்கு அன்னியதேசத்துப்புத்தகங்களை நம்மவர்வாங்குகிற ரகசியத்தைச் சிறிதுகவனிக்கவேண்டும். நாம் ஒருவரையொருவர் நம்புவது கஷ்டமாகவிருக்கிறது. அன்னியரோ, நம் முகத்தையு மறி யாராயினும் முன்பணம் சிறிது அச்சாரமாகப்பெற்றமாத்திரத்தே அதிகவிலையுள்ளபுத்தகங்களை நமக்கு அனுப்புகிறார்கள். நம்முடைய குலங்கோத்திரங்களை அவர்கள் விசாரிக்கிறார்களா? நம்முடைய செல்வநிலையையும், அந்தஸ்தையும் கேட்கிறார்களா? ஒருபோது மில்லை. பத்திரிகைகளிற் பிரசுரமாகும் விளம்பரங்களைக்கண்டு எழுது வதுதான் தாமதம். உடனே வதில்வந்துவிடுகிறது. வாங்கினலொழிய அவர் நம்மை விடுவதில்லை. நாம் சும்மாவிருந்தாலும் நம்மைப்பற்றி எப்படியோதெரிந்துகொண்டு சலிக்காது கடிதம் அனுப்புகிறார்கள். இவ்வாறு தபாற்செலவில் அதிகமாகப் பொருள்விரயமாயினும், முடிவில் அவர்களுக்கு நஷ்டமேகிடையாது. இவ்வாறு நம்பிக்கை யோடு அனுப்புகிறவர்களுக்குத் துரோகம் நம்மவர் கனவிலும் நினைப்பதில்லை.

புத்தகம் முடிந்தாலொழிய வெளியேற்றுவதுதவறு என்பது அவர்களுடைய மற்றொரு ரகசியம். சிறிதுசிறிதாக அச்சிட்டு மாதந் தோறும் சந்தாதார்களுக்கு அனுப்புவது இருவர்க்கும் சௌகரிய

மாயினும் முடிவிற் பல இடையூறுகளாற் புத்தகம் முற்றுப்பெறாது நின்றுவிடுகிறது. புத்தகத்தைமுடித்துவிட்டுப் பின் சந்தாதாரர்களை நம்பி அனுப்பிச் சிறிதுசிறிதாக அவர்களிடம் வசூல்செய்வது முடிவில் இலாபகரமாயிருக்கும். அச்சிட்டுவெளியேறியவுடன் புத்தகங்கள் விரைவாகச் செலவழிந்துவிடும். தெலுங்கில் விக்ஞானசந்திரிகாஸபையார் அச்சிடும் நூல்களெல்லாம் முடிவுபெற்றேவெளி வருகின்றன.

மூன்றாவது, ஏஜண்டுகளைநியமித்து வெளியூர்களுக் கனுப்பி ஜனங்களுக்குத் தம்முடையபுத்தகத்தைப்பற்றியவிவரங்களை விரிவாக எடுத்துச்சொல்லி அவர்களை வாங்கும்படிசெய்தல். இப்படிச் செய்யாதகம்பேனியே கிடையாது. இப்படிச்செய்தாலொழிய வியாபாரம் நடவாது. ஏஜண்டுகளாற் புத்தகவிற்பனையை அதிகப்படுத்திக் கொள்வதோடு, வேறு தகுந்தவர்களையும், கலாசாலையுபாத்தியாயர்களையும், ஸர்வகலாசாலைப் புத்தகக்கமிட்டியாரையும், சர்க்கார்டைரக்டர்துரைமுதலானவர்களையும் வசப்படுத்திப் புத்தகங்களைவாங்கவும் பாடமாகவைக்கவும் ஏற்பாடுசெய்யவேண்டும். இவ்வாறுசெய்வதென்னால், சங்கப்பதிப்புப்புத்தகங்கள் பாடமாகவைப்பதற்கு யோக்கியமானவைகளாயிருந்தாலொழிய முடியாது. ஆதலின், பாடம்வைப்பதற்கென்றே புத்தகங்கள் எழுதப்படவேண்டும். அப்புத்தகங்களை மேற்கூறியவர்களுக்கு இனாமாக அனுப்பிப் பார்வையிடும்படிசெய்து அவர்கள் நல்லபிப்பிராயங்கொடுத்தா லுடனே பாடமாகவைப்பதற்கு வேண்டியவழிகள் தானேதோன்றும். புத்தகங்களும் இப்பொழுது விலையாகாதுநிற்பதுபோல் ஒருபோதும் இருக்கமாட்டா. இந்த வழியில் நமதுசங்கம் ஊக்கமெடுத்து வேலைசெய்தால் நம் தமிழ்நாட்டுப்பள்ளிக்கூடத்தில் உபயோகிக்கும் புத்தகமெல்லாஞ் சங்கப்பிரசுரமாகவேயிருக்குமென்பது சொல்லாமலேயமையும்.

6. ஆறாவதாகக்கூறப்பட்ட பொதுஜன உபகாரமாகப் புத்தகசாலைகளமைத்த லொன்றையே சங்கநோக்கங்களிலெல்லாம் முக்கியமானதாக நான்கருதுகிறேன். ஏனெனின், புத்தகங்களைப் பணங்கொடுத்துவாங்குவோர் சிலரே. நம்மவர்களுக்குள் பெரும்பான்மையோர் ஏழைகள். சிறிது நல்லஸ்திதியிலுள்ளவர்கள் பணங்கொடுத்துப் புத்தகம்வாங்கிப்படிக்க எண்ணங்கொள்வதில்லை. பலர் எழுதப்

படிக்கத் தெரிந்துகொள்ளாது இருண்டநெஞ்சராய்க் காலங்கழித்து வருகிறார்கள். நமது மகளிரும் அவ்வாறே காலங்கழிக்கிறார்கள். இது பெரிதும் வியசனிக்கத்தக்கதே. ஒருதேசத்தில் 100-க்கு 90 பெயர் முழுமூடராயிருந்தால் அத்தேசம் எவ்வாறு விருத்தியடையும். தற்காலம் நம்மவரின்நிலை பல மாறுதலையடைந்திருக்கிறது. எவ்விதத்திலும் மேனாட்டாரைவிடத் தாழ்ந்தேயிருக்கிறோம். நம்மிடம் இன்ன குறைகளிருக்கின்றன, அவற்றை நிவர்த்திப்பதற்குவழிகள் இவையென அறியவும் பலர்க்கு வழியில்லை. அவற்றையறிந்தசிலர்க்கு ஜனங்களின் அறியாமையாலும் அலக்ஷியத்தாலும் அக்குறைகளைநீக்கப் புகுவது அசாத்தியமாகத்தோன்றுகிறது. ஜனங்களின் அஞ்ஞானத்தால் எவ்விதப் பரோபகாரமானதொழில்களும், ஜனசமூகத்தின் நன்மையைக்கருதிச் செய்தவேலைகளும் இடர்ப்பாடுற்றுப் பயனற்றுப்போகின்றன. ஆதலின் நமது தற்காலநிலை இது, நமதுகுறைகள் இவை, அவற்றைநீக்கும்வழிகள் இவை யென்பவற்றை ஜனங்கள் நன்கறிந்து ஒழுகுவதற்கு முக்கியகருவி கல்வியே. கல்விச்செல்வம் பிற செல்வங்களைப்பயத்தலால் நம்மவருள் ஒவ்வொருவரு மதையடைய நாம் முயலுவதிலும் சிறந்தமுயற்சி யுளதோ. உலகத்தில் ஒவ்வொருவனும் படிப்பது அவசியம். சௌகரியக்குறைவாலும் அவகாசக்குறைவாலும் மனிதர்கள் மூடர்களாகவிருக்கிறார்களேயன்றி மூளைக்குறைவாற் படியாதுநின்றார்களென்ப தில்லை. நாம் இங்குக் குறிப்பனவெல்லாம் கீழ்ப்படிப்புக்குமட்டுமே. எல்லோரும் உயர்ந்தபரீக்ஷைகள்கொடுத்து மிக்க அறிவாளராகவேண்டுமென்பது வீணான எண்ணமாகும். எழுதவும், படிக்கவும், படித்தவற்றைக்கொண்டு நடக்கவும், இது நன்மைபயக்கும் இது தீமைவிளைக்குமென்று அறியவும் போதுமானஞான மேற்பட்டுவிட்டால் அதுவே போதுமானது. பின்னர் உலகநடவடிக்கைகளையறிவது ஜனங்களுக்கு மிகவும் எளிதாய்விடும்.

இக்காலத்திற் பத்திரிகைகளும் புத்தகங்களும் கணக்கில்லாது வெளியேறிப் பல்லோராலும்வாசிக்கப்படுவதால் ஜனங்களின் அறிவும் நாகரீகமும் விரிந்துசெல்கின்றன. ஆதலின், புத்தகசாலைகளை எங்குமமைத்து ஜனங்களைப் படிக்கச்செய்வதைத் தன்னுடையகடமைகளிலொன்றாக ஏற்படுத்திக்கொண்ட சங்கத்தின்பெருமையை யெவ்வாறு

புகழ்வது! ஆயினும் கருத்துப்படி நடப்பதற்குத்தகுந்தசௌகரிய மில்லையேயென்றவருத்தந்தான் நினைக்கநினைக்க மேலிடுகிறது. ஏனெனில், தமிழ்ப்புத்தகசாலையொன்றை யமைத்துத் தற்காலம் நம்மிடத்துள்ள நூல்களையெல்லாம் சேர்த்துவைத்தாலும் எத்தனைபேர் அதிலுள்ளபுத்தகங்களை யெடுத்துப்பார்க்கப்போகிறார்கள். எதைத் தொட்டாலும் செய்யுள்நூலாக இருக்கிறது. அதிற் சாதாரணமனிதருக்கு ஒன்றும்விளங்குகிறதில்லை. அவை ஒரு நூதனபாஷையில் எழுதப்பட்டவைபோலத் தோன்றுகின்றன. சிறிதுபடித்தவர்க்கும் செய்யுள்நூல்கள் விளங்குவது கடினமே. வசனநூல்களும் பத்திரிகைகளும் எளியநடையில் எழுதப்பட்டு நிறைந்திருந்தாலொழியப் புத்தகசாலையை ஜனங்கள் பேணமாட்டார்கள். ஆதலின், தமிழ்ப் புத்தகசாலையமைப்பதற்குமுன்பு தமிழ்வசனநூல்களை யேராளமாக இயற்றிப் பரப்புவது அவசியம்.

7. செந்தமிழ்க்கலாசாலை மதுரையில் நடைபெற்றுவருகிறதென்றும், அதிற் சிலமாணவர்கள் சங்கத்தார்நடத்திய தனித்தமிழ்ப் பரீக்ஷைகளில்தேறித் தமிழ் உபாத்தியாயர்களாக அமர்ந்திருக்கிறார்கள் என்றும் முன்னமே சொன்னோம். ஆயினும் இக்கலாசாலையிற் கற்கவரும் மாணவர்கள் இங்குவந்துதான் எல்லாப்பாடங்களையும் ஒருமுறையாகக் கற்கிறார்கள். சிறிதுகாலமிருந்து சிலர் பிரவேசபண்டிதபரீக்ஷைதேறவும் ஏதேனும் ஒருவேலைகிடைத்தால் நின்றுவிடுகிறார்கள். சிலர் பாலபண்டிதர்களாய் வெளியேறுகிறார்கள். பண்டிதபரீக்ஷைவரைபடித்தவர்க ளில்லாதிருப்பது வியசனிக்கத்தக்கதேயாம். அப்படி ஓரொருவர் பண்டிதபரீக்ஷைவரை படித்துத்தேறிவிட்டாலோ அவர் பின்பு கலாசாலையிற்படிக்கவேண்டுவ தொன்றுமில்லையென நினைக்கிறார்கள். பரீக்ஷைக்குப்படிப்பதற்கும், ஆராய்ச்சிமுறையிற் படிப்பதற்கும் முழுதும் பேதமுண்டு. ஏதோசிலகேள்விகளுக்கு ஒன்றாய்விடையளித்துவிட்டாற் பரீக்ஷைதேறிவிடுகிறது. தேறிவிட்டதனால் எல்லாம் தெரிந்துவிடுமா? ஆங்கிலத்தில் எல்லாவிதக்கல்வித்துறைகளிலும் ஆராய்ச்சிச்சாலையென்பதொன்றுண்டு. அதில் உத்தியோகம்பெறுபவர், மகாபண்டிதர்களே. அதில் மாணுக்காக இருக்க விரும்புவோர் பீ. ஏ., எம். ஏ. முதலிய உயர்ந்தபட்டங்கள் பெற்றிருக்கவேண்டும். மற்றவர்க்கு அதன்வாசலைமிதிக்கவும் யோக்கியதை

கிடையாது. அதைப்போலத் தமிழுக்கும் ஓராராய்ச்சிச்சாலையிருப்ப தவசியமென்பதை ஆங்கிலங்கற்ற ஒவ்வொருவரும் ஒப்புக்கொள் வார்கள். சமீபத்திற் சென்னைச் சர்வகலாசங்கத்தார் இங்கிலாந்தி லிருந்து ஒரு திராவிடபாஷாதத்துவநிபுணரை இங்கு வரவழைத்து அவரைக்கொண்டு நம்மவரிற் சிலரை அம்மாதிரியானதுறைகளிற் பழக்கத் தீர்மானித்திருப்பதைப் பலரு மறிவர். நமதுசங்கத்தாரும், இவ்விஷயத்திற் சிறிது ஊக்கமெடுத்துக்கொண்டு சர்வகலாசங்கத்தார் உதவியைப்பெற்று அவ்வாராய்ச்சியின்வழிகளைத் தெரிந்துகொள் ளுதல் அவசியமாகின்றது. இப்பொழுது உண்டி உடை புத்தகம் முதலியனபெற்றுப்படிக்கும்மாணவர்கள் தமிழுக்குச் சிறிது நன்மை புரிவதாகவைத்துக்கொண்டாலும் அவருடையமுயற்சி சம்பாத்தியத் திலேயே சென்றுவிடுகிறது. சம்பாதிப்பதற்கான ஒருவழியைத் தேடிக்கொடுத்த சங்கத்தினிடத்து அவர்கள் நன்றியறிவுடையவர்க ளாயிருப்பார்களென்பதற்கு ஐயமில்லை. ஆயினும் நன்றாய்த்தேறிய மாணுக்கர்களைச் சங்கத்தில்வைத்துக்கொண்டு இரண்டொருவர்க் கேனும் பொருளுதவிசெய்து தமிழுக்கே உழைக்கும்படி தூண்டினால் தமிழாராய்ச்சி மிகப் பயன்பெறும். இவ்வாராய்ச்சிசெய்யப்புகும் மாணவர்க்குத் தமிழ்ஞானத்தோடு கன்னடம், மலையாளம், தெலுங்கு, குடகு, துளுமுதலிய ஐக்கியபாஷாஞானம் இன்றியமையாதுவேண் டற்பாற்று. ஆங்கிலவாராய்ச்சிமுறையும், ஸமஸ்கிருதபாஷையிற் பயிற்சியும்வேண்டுமென்பது முன்னமே சொல்லப்பட்டது.

8. கிளைச்சபைகள்ஸ்தாபித்தல்:—உலகத்தில் எவ்விதமுயற்சி களும், பலர் பலஇடங்களிற்சென்று கண்ணுங்கருத்துமாகத் தம்மா லியன்றதைச்செய்தாலன்றிச் சித்திபெறுவது கூடாததாகும். இந்தி யாவில் தற்காலம் ஏற்பட்டுள்ள பலஸபைகளுக்கும் இராஜதானித் தலைநகர்தோறும் கிளைச்சபைகளுள்ளன. தலைநகரிலுள்ளஸபையார் ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும் கிளைச்சபைகள் ஏற்படுத்தி மேற் பார்த்துவருகிறார்கள். ஜில்லாஸபைக்குக்கீழ்த் தாலூகாஸபைகளும் உள்ளன. ஜனங்கள் கற்றறியாதகுறையால், கிராமாந்தரஸபையேற் படுவதற்குத் தற்காலத்தில் தகுந்தசாதனங்கள் இல்லாமலிருக்கின் றன. ஆயினும் கூடியவிரைவில் கோஆப்ரேடிவ்சொஸைடி (Co-operative Society)யார்முயற்சியாற் கிராமாந்தரஸபைகள் ஏற்படு

மென்பதற்குப் பலகாரணங்கள் உள்ளன. ஆதலின், தமிழ்ச்சங்கத்தாரும் கிளைச்சபைகள் ஏற்படுத்தித் தங்கள் நோக்கங்களை வெளியிட்டு அவை முற்றுப்பெறுமாறுசெய்வது அவசியமேயாம். கிளைச்சபைகள் ஏற்பட்டால் இன்ன இன்ன நிபந்தனைகட் குட்பட்டுநடக்க வேண்டுமென்ற நிபந்தனைகளும் சங்கத்தார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வாறெல்லாஞ் செய்திருந்தும், இதுவரை மதுரைத்தமிழ்ச்சங்கமாகிய தாய்ச்சபைக்குக் கிளைச்சபைகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஏற்படாததற்குக் காரணம் சங்கத்தாரின்முயற்சிக் குறைவேயாம். பலவூர்களிலும் சங்கத்தின் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்களிற் கனவான்களும் தனவான்களும் கல்விமான்களுமாகப் பலர் இருந்தும் இத்தமிழ்ச்சங்கத்திற்கு வேறு கிளைச்சங்கங்கள் இதுவரை ஏற்படாதிருப்பது கவனிக்கத்தக்கதே. இனியேனும் அவர்கள் துயிலொழிந்து, சங்கத்தின் முக்கியநோக்கங்களிலெல்லாம் முக்கியமாகிய இந்நோக்கத்தை நிறைவேற்றுவார்களாக. எவ்வாறு நிறைவேறக்கூடுமென்பதைப்பற்றிச் சிறிதுகூறி இவ்விஷயத்தை முடிப்பேன்.

முதலாவது:-பல வூர்களிற் பல சங்கங்க ளிருக்கின்றன. அவை தனித்தனியே காரியநிர்வாகஞ்செய்வதனுல் அனைவரும் ஏகோபித்து ஒருகாரியத்தைநடத்தவும் ஒருவழியில் தங்கள்முயற்சியை ஊக்கிச் செலுத்தவும் முடியாமற்போய்விடுகிறது. ஆதலின் இச்சபைகளையெல்லாம் கிளைச்சபைகளாகமாற்றிவிடவேண்டும். மதுரையில் தாய்ச்சபையையும், ஒவ்வொரு தமிழ்ஜில்லாவிலும் ஒவ்வொரு கிளைச்சபையையும் ஏற்படுத்தவேண்டும். ஜில்லாஸபைக்குக் கீழ்ச்சபைகள் பல தாலூகாக்களிலும் ஏற்படவேண்டும். தாலூகாஸபைகளின்கீழ்ப் பலகிராமங்களையும் ஒருங்குசேர்த்துக் கிராமாந்தரஸபைகள் ஏற்படுத்தவேண்டும்.

இரண்டாவது:—ஸபைகள் ஏற்பட்டால்மட்டும் போதாது. அச்சபையோர்கள் அடிக்கடிகூடிக் காரியங்கணடத்தவும் மேன்மேலும் தமிழ் விருத்தியடைவதற்கானவழிகளைத்தேடவும் முயற்சிகள்செய்ய வேண்டும். அவர்களைத் தனியேவிட்டுவிட்டால் அதிசீக்கிரத்தில் உறக்கங்கொள்வார்கள். பிறகு அவர்களையெழுப்புவதற்கு ஒரு

பிரும்மகற்பஞ் செல்லும். அவ்வாறு அவர்களைத் துயிலாதுசெய்யத் தமிழ்ச்சங்கத்தார், ஒரு சிறந்தவித்வானைத் தெரிந்தெடுத்து அவர்க்குத் தக்கசம்பளமும் படியுங்கொடுத்து அவரை வெளியூர்களுக்கு அனுப்பி அவர் ஜில்லாஸங்கத்தாரைக் கண்டுபேசவும் அவர்களை உற்சாகப்படுத்தவும் முயற்சிகள்செய்யவேண்டும். அவ்வித்வானைக் கொண்டு பிரசங்கஞ்செய்விக்கவேண்டும். சங்கநோக்கங்களைப் பலர்க்கும் அறிவிக்கவேண்டும். சங்கப்பதிப்புப்புத்தகங்களை விற்கவேண்டும். செந்தமிழுக்குச் சந்தாதாரைச்சேர்க்கவேண்டும். ஏடுகளைத் தேடியனுப்பும்படிசெய்யவேண்டும். செந்தமிழுக்குப் பிரதிப்பிரயோஜனங்கருதாது விஷயதானம்புரிவோரையும் பிரதிப்பிரயோஜனங்கருதி விஷயதானம்புரிவோரையுங்கண்டு அவர்களைத் தவறாதுவிஷயதானஞ்செய்துவருமாறு தூண்டவேண்டும். இவ்வாறுசெய்யக்கூடிய மனிதர்களையே பொறுக்கியெடுத்தல்வேண்டும். நம்மவரிற் படித்தவர் அநேகரிருக்கிறார்கள். படிப்பொன்றுமட்டுமிருந்தாற்போதாது. பிரசங்கசக்தியும், பிறருடன்பேசும்போது அவர்மனதைக் கவரும் சக்தியும், பலவிடங்களுக்குஞ்சென்று பலருடன்கலந்து உறவாடிக் காரியங்களைமுடிக்குஞ் சாமர்த்தியமும் வேண்டும். தங்கள்கல்வியைப் பிறருக்குக்காண்பிக்கவும், தங்கள்பிரசங்கத்தைக்கேட்டுப் பிறர் ஆனந்திக்கவும், சென்றவிடங்களிற் பிறவித்வான்களோடுவாதித்து வெற்றிபெறவும் விரும்புமவர்களை உடனே விலக்கவேண்டும். இது போலவே கிளைச்சபையாரும் சிலவித்வான்களைக்கொண்டு தங்கள் தங்கள் ஜில்லாவிலுள்ள ஸபைகளுக்கு ஊக்கமளித்துவரல்வேண்டும். தாலூகாஸபையாரும் கிராமாந்தரங்களுக்குச் சிலரையனுப்பி அங்குள்ளஸபையார்களுக்கு ஊக்கமளித்துவரல்வேண்டும்.

மூன்றாவது :—இப்போது சங்கத்தார்செய்யும்வேலை இன்னதென்று ஒருவருக்கும் வெளியாகவில்லை. "செந்தமிழ்"ப்பத்திரிகை மூலம் சிலவித்வான்களுக்குச் சங்கத்தின்நடவடிக்கை வெளியாகிறது. பத்திரிகைவாங்குவோர் 400பேர்களேயாதலால் மிகவுஞ்சிலரே சங்கத்தின் அருமையானவேலைகளை யறிகிறார்கள். தமிழரனைவரும் சங்கத்தில் அபிமானம்வைக்கவேண்டுமென்றால், சங்கமானது புதியமுறைப்படி முயற்சிசெய்யவேண்டும். வருஷத்திற்கொருமுறை பலவிடங்களிலுமிருந்து வித்வான்களையும் கனதனவான்களையும் வருவித்து

அவர்களுக்கு மனங்களிக்குமாறு விருந்தளித்தும், திரும்பி அவர்கள் தங்கள் தங்கள் ஊர்க்குப்போகும்போது சிலர்க்கு வழிச்செலவுக்குப் பணங்கொடுத்துந் திருப்திபண்ணினால்மட்டும் போதாது. அவ்விதக் கூட்டத்தாற் பலன்சொற்பமே யேற்படுகிறது. சங்கத்தின் முக்கிய நோக்கம் தமிழையபிவிருத்திசெய்தலன்றோ. அங்ஙனமாயின், தனித் தமிழ்ப்பள்ளிக்கூடங்களை யெங்கணும்பெருக்குவது சங்கத்தார்கடனன்றோ. எவ்விதம் பள்ளிக்கூடங்களைப்பெருக்குவது என்றுகேட்டால், தற்காலத்தில் நம்நாட்டில் மேனாட்டுப்பாதிரிமார்களும், பிரும்மஞானஸபையென்ற தேசாபிகல்சொசைட்டியார்களும் எவ்வாறு பள்ளிக்கூடங்களைப் பெருக்கிவருகிறார்களென்றுபாருங்கள். முயற்சி திருவினையாக்குமன்றே. அவ்வாறுசெய்யத் தமிழ்ச்சங்கத்தார் தற்சமயம் முன்வரவில்லையென்றாலும், பிறஸபையாருடன்சேர்ந்து தமிழ் சம்பந்தப்பட்டமட்டில் அவர்களுக்கு ஏன் உதவிசெய்யக்கூடாது.

நான்காவது:—செந்தமிழ்ப்பத்திரிகையை நடத்துவதிற் சிலரேயன்றிப் பலரும் பயன்பெறும்படிசெய்யவேண்டும். இப்போது செந்தமிழ்வாயிலாகவெளியேறுகிற விஷயங்களெல்லாம் பலர்க்கும் விளங்குகின்றனவென்று தைரியமாய்ச்சொல்வதற்கு நாவெழுவதில்லை. பெரும்பாலார்க்குப் பயன்படுவதைக்கருதியே விஷயங்கள் எழுதப்படவேண்டும். நூல்கள் புத்தகபாரமாகச் செந்தமிழில்வாராது தனியே அச்சிடப்படவேண்டும். தற்காலத்திற் சில ஆங்கிலப்பத்திரிகைகளும், சில தமிழ்ப்பத்திரிகைகளும் நடத்தப்படுவதுபோலவே நமது "செந்தமி"ழும் நடத்தப்பெறவேண்டும். "செந்தமிழ்"ப் பத்திரிகை பல்வேறுவிஷயங்கள்நிரம்பியதாய் யாவர்மனதையுங் கவரத்தக்கதா யிருக்கவேண்டும். விஷயங்களுக்குத்தகுந்த சித்திரப் படங்களும் அமைந்திருத்தல்வேண்டும். இவற்றைத்தவிரச் சங்கத்தார் தாமே ஒரு தினசரிப்பத்திரிகையேனும் வாராந்தப்பத்திரிகையேனும் இனியநடையில் நடத்திப் பிறபாஷைகள்போலவே தமிழும்

நாகரீகத்திற்கும்,காலத்திற்கும் தகுந்தவாறு மாறுதலடைந்து புதிய அபிப்பிராயங்களை வெளியிடுவதற்குத்தக்கதாயிருக்கிறதென்பதை எல்லாருக்கும் எடுத்துக்காட்டவேண்டும். இச்சமயத்தில் தமிழ்ச் சங்கத்தாரின்உதவியின்றிப் பிறரால்நடத்தப்படும்பத்திரிகைகளையும் கவனிப்பது அவசியமாயிருக்கிறது. அவைகளெல்லாம் பிறர் வாசித்துமகிழவேண்டுமென்றே எழுதப்படுவதால் அவைகளெல்லாம் எளியநடையில் எழுதப்பட்டுவருகின்றன. அவற்றைப்படிப்போரும் செந்தமிழைப் படிப்பவர்களைக்காட்டிலும் பதின்மடங்கு அதிகமாகஇருக்கிறார்கள். இவ்வாறு எழுதப்படாவிட்டால் அப்பத்திரிகைகளை ஒருவரும் தொடமாட்டார்கள். அவை விரைவில் நின்றுவிடும். சாதாரணமனிதர் ஒருவரே இவ்வாறு பத்திரிகைகளை நடத்தக்கூடுமானால், தமிழ்வித்வான்களின் சம்பந்தம்பெற்ற சங்கத்தார் எவ்வளவு மேன்மையாகவும் பரோபகாரமாகவும் நடத்தக்கூடும். பள்ளிக்கூடத்திலுள்ள ஒவ்வொருமாணவனும் சங்கப்பத்திரிகைகளை வாங்கி வாசித்தறியக்கூடுமானாற் சங்கத்தின்பெருமையை அளவிடமுடியுமா. இப்போது தமிழ்ச்சங்கமென்றால் அவர்களுக்கு அலக்ஷியமாகஇருக்கிறது. சங்கத்தைச்சேர்ந்தவர்களெல்லாம் சப்தஜாலக்கூட்டத்தாரென்றே யெண்ணுகிறார்கள். இந்த எண்ணத்துடன் தமிழ்கற்கும்மாணவர்கள் வளர்ந்தால் தமிழ் எவ்வாறு விருத்தியடையும். ஆதலின், தமிழ்ச்சங்கத்தார் தமிழ்மாணவர்களுக்குத் தாங்கள் செய்யும்வேலை இன்னதென்றுகாண்பிப்பது அவசியமாகின்றது. மாணவர்கள்படித்துமகிழும்படி தமிழ்ச்சங்கத்திலிருந்து பத்திரிகைகளும் புத்தகங்களும் வெளியானாலொழியத் தமிழ்ச்சங்கமிருப்பதனாலுண்டாகும்பயனை அவர்களடையமாட்டார்கள். இப்பொழுது சங்கத்தார் செந்தமிழை "மாணவர்களுக்குப் பாதிவிலைக்குக்கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். இருந்தும் என். எத்தனை மாணவர்கள் அதை வாங்கிப்படிக்கிறார்கள்!" எத்தனைபள்ளிக்கூடங்களில் நமது "செந்தமிழ்" வாங்கப்படுகிறது! மாணவர்களை உற்சாகப்படுத்தி ஒருவரு

ஷத்திற்குச் சந்தாதாராக ஆக்கினால் மறுவருஷம் சந்தாவைநிறுத்தி விடுகிறார்கள். "செந்தமிழை" இனாமாகக்கொடுத்தாலும் வேண்டா மென்கிறார்கள். இது என்னவெறுப்பு! இதற்குக்காரணம் நமக் கெல்லாந் தெரிந்ததுதானே. அவர்களுடைய மனதைத்திருப்புவது ஒரு கடினமாகுமா. இதைச் சங்கத்தார் சற்று உற்றுநோக்குவாராக.

ஐந்தாவது:—சங்கத்தின் முயற்சியைத் தமிழரேயன்றி மற்றெல் லாரும் அறியவேண்டியது அவசியமாகையாலும், பண்டைத்தமிழ் நூலிலுள்ள அருமையான விஷயங்களைப் பலருங்கண்டு ஆனந்திப் பதனால் நம் தமிழுக்கு ஒரு ஏற்றங் கிடைக்குமாகையாலும் சங்கத் தாரே ஒரு ஆங்கிலப்பத்திரிகையையும் நடத்துவது எல்லாவிதத்தி லும் நல்லது. இந்தப்பத்திரிகை தமிழ்ப்பாஷைக்கென்றே நடத்தப் பெறவேண்டும். பலருக்கு ஆங்கிலத்தில் எழுதுவது சுலபமாகவும், கௌரவத்தைக்கொடுப்பதாகவும் இருக்கிறது. பாஷாதத்துவநிபுணர் கள் அப்பத்திரிகையைக்கொண்டு பலவிஷயங்களை வெளியிடுவார்கள். அவ்விதமாக நடத்தும்பத்திரிகையைத் தற்காலத்தில் மூன்றுமாதத் திற்கொருமுறைவெளியிட்டாற் போதுமானது. பின்னால் மாதந் தோறும் வெளியேற்றலாம். இது அவசியமெனக்கொண்டால் ஆங் கிலத்திற்பயிற்சியுள்ள ஒருபத்திராதிபர் நியமிக்கப்படவேண்டு மென்பது சொல்லாமலே யமையும்

தமிழபிமானம்பற்றி யெழுதிய இவ்வியாசத்திலுள்ள பிழை களைத் தமிழ்வல்லாரும் தமிழ்ச்சங்கத்தாரும் பொறுத்தருள்வாராக. நமது செந்தமிழும் மேன்மைபெற்றுப் பல்லோராலும் போற்றப் பெற்று இவ்வுலகில் நிலவுவதாக.

ஒரு தமிழ்நண்பன்.

மதிப்புரை.

—:o:—

1. சிவஞானசித்தியார்சுபக்கமூலமுமுரையும்:—இது, சிவஞான சித்தியார் என்னும் சைவசாஸ்திரத்தின்பகுதியாகிய சுபக்கத்துக்குத் திராவிடமாபாடியகர்த்தராகிய மாதவச்சிவஞானயோகிகள்செய்தருளிய உரையைத்தழுவி, திருவாவடுதுறைஆதீனசைவப்பிரசாரகர் தூத்துக்குடி ஸ்ரீ போ. முத்தையபிள்ளையவர்களாற்செய்யப்பெற்றது. மிகஅருமைவாய்ந்த இந்நூலின் உயர்வும் இதற்கெழுதப்பட்டுள்ள பலவுரைகளி னியல்பும் இவ்வுரையின்பயனும் மகிபாலன்பட்டிவித்வான் ஸ்ரீ மு. கதிரேசன்செட்டியாரவர்களெழுதியுள்ள முகவுரையால் நன்குவிளங்கும். இது சைவசாத்திரங்கற்பார்க்கு மிகப் பயன்படத் தக்கது. இதன் விலை ரூ 1—8—0.

---

2. கண்டனூர்மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழும், சுந்தரேசர்பதிகமும்:—இவை, காரைக்குடியில்வசிக்கும் சதாவதானம் ஸ்ரீ பாலசுப்பிரமணியஐயரவர்களாற்செய்யப்பெற்ற செவ்வியசெய்யுட்களுடையன. இவற்றுடன், பல பண்டிதர்களாற்கொடுக்கப்பெற்ற சாத்துக்கவிகளுஞ் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. அன்றியும் ஐயரவர்கள் தேசிகஞானமூர்த்திஞானக்கும்மியென் றொருகும்மிப்பாடலும் பாடியிருக்கின்றனர். இப்புத்தகங்களைப் படிப்பவர்க்கு இன்னும் தமிழ்ப்புலவர்களிடத்துப் பிரபந்தங்களியற்றுந் திறமையில்லாமற்போகவில்லையென்பதினிதுவிளங்கும்.

மேற்கண்டபுத்தகங்கள்வேண்டுவோர் அவற்றின்ஆசிரியர்க்கெழுதிப்பெறலாம்.

இப்புத்தகங்கள்“பாண்டியன்புத்தகசாலை”யிற்சேர்க்கப்பட்டன.

பத்திராதிபர்.